www.tamilarangam.net

Raya

# மனிதம்

RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
SEINE FRANCE

⑧

நவ.டிச 90



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீட்டு முயற்சி.

# கவிதை தொகுப்பு

சென்ற இதழில் குறிப்பிட்டிருந்தபடி டிச. 31 இற்குள்
உங்கள் ஆக்கங்களை எதிர்பார்க்கிறோம்.

சிதறிப்போன வாழ்வுகளில் இரத்தம்
சொட்டும் துப்பாக்கிகளின் நாட்களி
மனிதநேயங்களின்மேல் வீசப்பட்ட
அந்த உணர்வுகளின்
பிரதிபலிப்புகளோ...

க்கு கவிதை
தொகுப்பு

அனுப்பவேண்டிய முகவரி,

MANITHAM
POSTFACH - 12
3000 BERN - 11
SWITZERLAND.

---

## நூல் அறிமுகம்




# பனிமலர்

புதியதொரு தமிழ்ச் சஞ்சிகை

வெளியீடு:
தமிழ்மக்கள் புதிய கலாச்சாரக் குழு
BCM POLARIS
LONDON WC1N 3XX.

www.tamilarangam.net

# மனிதம்



சிம்மாசனத்திலிருந்து
கீழ் இறங்குகிற
படிக்கட்டுகள் மீதாக
இறங்கி வருகின்ற
இரத்தம்
தேசத்தின் சிவப்புப்பெட்டி மீது
துளித்துளியாக விழுகிறது
இந்தச் சிவப் பெட்டியின்
கடைசி ஆணியை யாவது
அடித்துவிடாமலிருங்கள்
தயவு செய்து --
தயவு செய்து ---
தயவு செய்து ----

• சேரன் •

தொடர்ந்து வரும் யுத்தம், அதன் விளைவாய் பொருளாதார தடை, இவற்றினால் என்றுமில்லாதவாறு தமிழ் மக்கள் தமது சொந்த பிரதேசங்களை விட்டு அகதிகளாக வெளியேறிக் கொண்டிருக்கிறார்கள். எவ் வகையிலேனும் உயிர் பிழைத்தால் போதும் என்ற ரீதியில் வெளியேறுவோர் வடக்கிலிருந்து கொழும்புக்கும் தமிழகத்துக்கும் இடம் பெயர்ந்து கொண்டிருக்கிறார்கள். தப்பிச் செல்லும் படகுகள் கடலில் மூழ்கடிக்கப்பட்டு பலர் மாண்ட போதும் தொடர்ந்து வெளியேறி வருவது மக்களின் வாழ்வு எவ்வளவு தூரத்துக்கு அவலமாகியுள்ளது என்பதை படம்பிடித்து காட்டுவதாய் உள்ளது.

இவ்வாறு வெளியேறி தமிழகம் செல்லும் அகதிகள் அங்கு படும் இன்னல்கள் இன்னும் வேதனையை தருகின்றன. உயிரைப் பணயமாக வைத்து படகுகளில் தமிழகம் போய்ச் சேரும் அகதிகளிடம் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசாங்க அதிகாரிகள், பொலிஸ் மற்றும் அதிகாரிகள் பொருட்களை சூறையாடுவதும், பெண்களை பாலியல் பலாத்காரத்திற்கு உள்ளாக்குவதும், நிர்ப்பந்தமாக குடும்பக் கட்டுப்பாட்டு அறுவை சிகிச்சைக்கு உள்ளாக்குவதும் விசனம் அளிக்கிறது. நாதியற்ற சில அகதிகளின் கண்கள் தோண்டப்பட்டு விற்கப்படுவதாகக்கூட உறுதிப்படுத்தப்படாத செய்தி எட்டுகிறது. இத்தகைய நிலைமைகளும் எதிர்காலம் பற்றிய சூனிய நிலையிலும் மக்கள் தொடர்ந்து வெளியேறி வருவதற்கு காரணம்: இந்த 'சண்டை' முடிவுக்கு வருமா?, அப்படி முடிவுக்கு வந்தாலும் மீண்டும் தொடராமல் விடுமா? என்ற சந்தேக நிலைமையே காரணமாகும்.

அகதிகள் வெளியேற்றத்தில் - இன்று பலரது கவனத்தையும் ஈர்த்திருப்பது வடக்கிலிருந்து வெளியேற்றப் படும் முஸ்லிம் மக்கள் பற்றியதாகும். கிழக்கில் முஸ்லிம் மக்களின் மேல் மேற்கொள்ளப்பட்ட படுகொலைகள், தமிழ்- முஸ்லிம் மக்களிடையே விரிசலை உண்டு பண்ண அரசு மேற்கொண்ட / மேற்கொண்டு வரும் சதிகள், தமிழ் மக்களிடையே உள்ள குறுந்தேசிய உணர்வு, அதனைப் பிரதிநிதித்துவப் படுத்தும் அமைப்புகள் - இதன் விளைவாய் கிழக்கு துண்டாடப் படக்கூடிய சாத்தியம் என்பவற்றின் பின்னணியிலேயே வடக்கு வாழ் முஸ்லிம்களின் வெளியேற்றத்தை நோக்க வேண்டும்.

கடந்த காலங்களில் தமிழ்த் தேசிய இனத்தின் போராட்டத்திற்கு தலைமை கொடுப்பதாக கூறிக்கொண்டு 'போராடி' வந்த இயக்கங்கள் முஸ்லிம் மக்களின் தனித்துவத்தையும், விருப்பு வெறுப்புகளையும்

www.tamilarangam.net



கவனத்தில் எடுக்காமல் "தமிழ் பேசும் மக்கள்" என்ற பரந்த வரைவிலக்கணத்தினுள் முஸ்லிம் சமூகத்தையும் அடக்க முற்பட்டாலும் -

இயக்க தலைமைகள் மேற்கொண்ட நடவடிக்கைகள் தமிழ் - முஸ்லிம் விரிசலை தூண்டவே செய்தது.

தற்போது வடக்கிலிருந்து முஸ்லிம் மக்களின் வெளியேற்றம் குறித்து புலிகள் கூறும்போது "அவர்கள் தாமாகவே விரும்பி வெளியேறுவதாக" கூறுகிறார்கள் ஆனால் முஸ்லிம் மக்களின் பேட்டிகளோ "புலிகளே தம்மை வெளியேற நிர்ப்பந்தித்ததாக" தெரிவிக்கின்றன. வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசத்திலேயே தனியான முஸ்லிம் மாகாணப் பிரிவொன்றை உருவாக்க வேண்டும் என்றும் இதற்கு முஸ்லிம்களை பெரும்பான்மையாக கொண்ட மன்னார் மாவட்டத்தை கிழக்கின் அம்பாறையுடன் இணைக்க வேண்டும் என்றும் "முஸ்லிம் காங்கிரசால்" விடுக்கப்பட்ட கோரிக்கையினால் சினமடைந்த புலிகள் வடக்குவாழ் முஸ்லிம்களை வெளியேற்றுகிறார்கள் என கூறப்படுகிறது. இது புலிகளின் அரசியல் வங்குரோத்துத் தனத்தையே காட்டுகிறது. இத்தகைய கண்மூடித்தனமான செயல்கள் கண்டிக்கப்பட வேண்டியவை.

அண்மையில் முஸ்லிம் இயக்கங்களின் தேசிய சபை ரஞ்சனுக்கு எழுதிய கடிதத்தில் "மட்டக்களப்பில் பிறந்தும் கொழும்பை தளமாகக் கொண்டும் செயற்படும் 'முஸ்லிம் காங்கிரஸ்' போன்ற குழுக்களாலேயே மன்னார் முஸ்லிம்களுக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. அம்பாறையை தளமாகக் கொண்ட முஸ்லிம் மாகாண சபையுடன் மன்னாரை இணைப்

www.tamilarangam.net


பறை மன்னார் மக்கள் கனவில்கூட விரும்பவில்லை" என தெரிவித்திருப்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். இத்தகைய மனோநிலை கொண்ட மக்களை அவர்கள் காலாகாலமாக வாழ்ந்த பிரதேசத்திலிருந்து துரத்தியடிக்க நினைப்பது முட்டாள்தனமானது. ஒடுக்கப் படும் தமிழ்த் தேசிய இனத்தின் விடுதலைக்காக போரா டுவதாக கூறிக்கொண்டு தனக்குள் வாழும் இன்னோர் சமூகத்தின் உரிமையை நசுக்கும் ஒரு இயக்கமே தனது இனத்திற்கான விடிவை பெற்றுத்தரவா போகிறது?

---

# காத்தான்குடி 90

என்ன?

உங்கள் ஒவ்வொருவருக்கும்
தான்
ஆயுதம் தந்தாயிற்றே!

பிறகுமென்ன?

மாறி மாறி தலைகளைச்
சீவிக்கொள்ளுங்கள்.

ஏன் இந்த குடியிருப்புக்களை
விட்டு வைத்தீர்?
யாருக்காக?

வயல்வெளிகளுக்குக்கூட
நெருப்பு வையுங்கள்

பள்ளிவாசலும்,கோவிலும்
புனிதமென்று
யார் சொன்னார்கள்?

தெறிக்கிற குருதி
குர்ஆனையும்
வேதங்களையும்
கறைப்படுத்தட்டும்.

நாகரீகம் வளர்ந்த பின்னும்
இன்னும்
மிருகங்களையா
பலியிட்டுக்கொண்டிருக்க
முடியும்?

எல்லாவற்றையும்
'அவர்கள்'
அபகரித்துக்கொள்ளும் வரை
போரிட்டுக்கொண்டிருங்கள்!

பிறகு
பூட்டிக்கொள்வர்
வண்டியின் நுகத்தில்
உங்களை
எருமைகளாய்.

—அந்நியன்.

நன்றி சரிநிகர்

---

www.tamilarangam.net

# ஈழத்து கலை இலக்கியம். சிறுநோக்கு

இன்று எம் மண்ணின் அவலமே வாழ்வாகிப் போனது. அமைதி நிலைப்பதற்கான சாத்தியப்பாடுகள் எல்லாம் குறுகிக் கொண்டே போகும் நிகழ்வுகள்!

இனவாதத்தையே இதயத்துடிப்பாய் கொண்டு இயங்கும் சிங்கள அரசும், அரசியல் வாதிகளும் தமிழ் மக்கள் மீதான ஒடுக்கு முறை வடிவங்களை காலத்துக்கு காலம் பெருக்கிக் கொண்டே போகிறார்கள்.

அரசியல் உரிமைகளைப் பறித்தும், பாரம் பரிய பிரதேசங்களை ஆக்கிரமித்ததோடு மட்டுமல்லாமல் இன்று வரை கொடூரமாக நிகழ்த்தப்படும் யுத்தத்தின் ஊடாக தமிழர்களின் பண்பாட்டுத் தளத்தையும் உடைத்து நொருக்குவதில் குறியாய் இருக்கிறார்கள்.

பண்பாட்டு தளத்தின் அங்கங்களான அறிவியல், கல்வி, ஆன்மீக கருத்துக்கள் எல்லாமே இன்று சீரழிவு நிலைக்குள் தள்ளப்படுகின்றன இந் நிலையில்; எமது மக்களின் கலை இலக்கியத்தின் பண்பு எத்தகைய நிலையில் உள்ளது? இவ் இலக்கியத்தினால் விளையும் பயன்பாடுதான் என்ன? என்ற கேள்விகளுக்கு ஊடாக எமது தேசத்து கலை இலக்கியப் பரப்பில் தனது பார்வையை செலுத்துகிறது இக்கட்டுரை. இதற்கு முன்னதாக கலை இலக்கியம் சார்பான சில கருத்துகளை குறிப்பிட்டாக வேண்டும்

மனிதனது உணர்வுகளும் அவன் வாழும் சூழல் குறித்த அனுபவங்களின் வெளிப்பாடுகளுமே கலை இலக்கியம். மக்களின் வாழ்விலிருந்து கற்றுக் கொண்டதையும், அறிந்து கொண்டதையும் செழுமைப் படுத்தி கலை இலக்கியமாக மக்களிடமே திருப்பிக் கொடுக்கிறான் படைப்பாளி.

www.tamilarangam.net


உண்மையில் மக்களின் வாழ்வுதான் கலைக்கும் இலக்கியத்துக்குமான மூல ஊற்றாக விளங்குகிறது. இத்தகைய மதிப்பீடுகளோடு பார்க்கும் போது மக்களின் வாழ்வு முறைதான் கலை இலக்கியத்தின் பண்புகளை தீர்மானிக்கிறது. கலை இலக்கியங்கள் எப்போதும் தன்காலத்து நிகழ்வுகளை மட்டும் தொகுத்து கூறுவதோடு நின்றுவிடுவதில்லை. அதற்கும் மேலே படைப்பாளியின் பரந்த ஆழமான அறிவு, சமுதாயத்தின் மீது அவனுக்கு இருக்கும் அக்கறை, உணர்வு, மதிப்பீடு போகிறவற்றின் விளைவாய் ஏற்படும் தீர்க்க தரிசனம் [இது ஒரு வகையில் படைப்பாளியின் ஆத்மார்த்தமான விருப்பமாக கூட இருக்கலாம்] படைப்பாளியின் காலத்துக்கு மேலாக பல நூற்றாண்டு வாழக்கூடிய இலக்கியங்களை தோற்றுவித்து விடுகின்றன. எப்படியாயினும் மனித வாழ்க்கையில் இருந்து அதிலும் அவன் வாழும் சமகால சூழலில் இருந்து கலை இலக்கியத்தை பிரிக்க முடியாது. அதே வேளை, சமகால பிரச்சனைகளை மட்டும் கூறிவிட்டு செல்வதல்ல படைப்பின் நோக்கம்; அந்தப் படைப்பு வாசகனில், ரசிகனில் ஏற்படுத்தும் பாதிப்பு, சிந்திக்க தூண்டும் வலிவும், அதற்கான சரியான சிந்தனையை பெறவைப்பதிலுமே முழுமை பெறுகிறது.

சமுதாயத்தில் நிகழும் கொடூரங்களுக்கு எதிராகவும், மனச்சாட்சியை உலுக்கும் நிகழ்வுகளுக்கு எதிராகவும் உரத்து குரல் கொடுக்க கூடியதுமான படைப்புகளே சமூகப் பொறுப்புணர்வுள்ள படைப்புகளாகும். இத்தகைய கலை இலக்கிய படைப்புகளே எமது சமுதாயத்துக்கு இன்று தேவையானது.

இனி எமது தேசத்து கலை இலக்கியத்தை நோக்குவோம்:-

சர்வதேச தமிழர் கலை இலக்கியத்தின் ஒரு பகுதிதான் ஈழத் தமிழர் கலை இலக்கியமாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டு வரையில் ஈழத்து கலை இலக்கியத்தில் அதிகமாக தமிழகத்தின் பாதிப்பே இருந்து வந்துள்ளது. இந்திய விடுதலைக்கான தேசிய எழுச்சியின்

www.tamilarangam.net



தாக்கமும், பாரதியின் இலக்கிய பிரவேசமும், ஈழத்திலும் தேசிய கலை இலக்கிய எழுச்சிக்கு வித்திடுகிறது.

பாரதி; தமிழ் இலக்கிய வரலாற்றில் நவீனத்துவத்தின் வாசல் கதவை திறந்து விடுகின்றான். பாரதியின் தாக்கம் இந்திய கலை இலக்கிய வாதிகளிடத்து மாத்திரமின்றி ஈழத்திலும் விரிவடைகிறது. இருப்பினும் ஈழத்து கலை இலக்கியம் தனக்கே உரிய பாரம்பரிய கூறுகளோடு தன்னை தமிழகத்தில் இருந்து வேறுபடுத்திக் கொள்கிறது.

> " ஒவ்வொரு சமூக மக்களும் தாம் ஒரு குறிப்பிட்ட பாரம்பரியத்துக்கு வாரிசுகள் என்னும் உணர்வுடையவராய் வாழ்கின்றனர். அது அவர்களுடைய வாழ்க்கை தத்துவத்தையும், உலக நோக்கையும் பெருமளவிற்கு பாதிக்கிறது. குறிப்பாக கலை இலக்கிய, சமய நம்பிக்கை, ஒழுக்கவியல் ஆகிய துறைகளில் பாரம்பரிய உணர்வு முனைப்பாக செயல்படுவதைக் காணலாம். ஆனால் வெவ்வேறு காலப்பகுதிகளில் பாரம்பரியத்துக்கு வாரிசுகளாக இருப்பவர்கள் தமது பாரம்பரிய கூறுகளில் சிற்சில பொருத்தமின்மைகளும் குறைபாடுகளும் இருப்பதை கண்டு அவற்றிற்கு பரிகாரம் தேட முற்படுவதையும் காணலாம்."

— கைலாசபதி —

50 — 60 ஆண்டு காலகட்டம் ஈழத்தில் கலை இலக்கியத்தில் பாரிய மாற்றங்களை தோற்றுவிக்கிறது. இதற்கான புறச் சூழலையும் நாம் அறிந்தாக வேண்டும்.

இலங்கையில் 1953 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் தேசம் முழுவதும் நிகழ்ந்த கர்த்தால் போராட்டமும் 56 ன் இனக் கலவரமும், யாழ்ப்பாணத்தில் 60 ம் ஆண்டுகளில் வெடித்த சாதியத்துக்கு எதிரான போராட்டமும் ஈழத்து கலை இலக்கியத்தை சமுதாய நோக்குடையதாக உயர்த்தி விடுகிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இது வரையில் தமிழ் இலக்கியத்தின் பார்வை படாத சமூகத்தின் அடித்தளத்திலுள்ள மக்களின் பிரச்சனைகள் எழுத்து இலக்கியத்தின் கரு ஆகிறது. நடுத்தர வர்க்கத்துக்குள் நின்று உழன்ற இலக்கியம் வாழ்வின் அடி மட்டத்துக்குள் ஊடுருவுகிறது. சாதாரண கூலித் தொழிலாளியும், சுருட்டு தொழிலாளியும் இலக்கிய நாயகர்கள் ஆகிறார்கள். இவர்களது வாழ்க்கைப் பிரச்சனைகள் இலக்கியம் ஆகின்றன. இத்தகைய போக்கு, தமிழிலக்கியத்தில் சிறப்பான பண்புகளை பிற்பட்ட காலத்தில் ஏற்படுத்துவதற்கு உந்து சக்தியானது.

பேச்சு மொழி, மண்வாசனை, சமகாலப் பிரச்சனை எழுத்து இலக்கியப் பரப்பில் அதிகம் ஆளுமை செலுத்தி வருகிறது. சாதாரணமான நகைச் சுவை பத்திரிகைகளில் கூட இத்தகைய தன்மைகளைக் காணலாம்.

பாணுக்கு பாலகன் வேண்டி அழுதிட
பேக்கரியில் நின்ற பிரான்
ஆளுக்கு அரை இறாத்தல் என்றான்

இந்தப் பாடல் எழுபதுகளில் வெளிவந்திருந்த "கலகலப்பு" என்ற நகைச் சுவைச் சஞ்சிகையில் வெளிவந்ததாக ஞாபகம். இந்த எழுபதுகளின் ஆரம்பத்தில் பாணுக்காக அதிகாலை மூன்று, நான்கு மணிப் பொழுதுகள் வரிசையாய் காத்திருந்த ஸ்ரீமாவின் ஆட்சிக்காலத்தை நினைவு படுத்துகிறது.

இத்தகைய சமுதாய நோக்குடைய படைப்புகள் இலக்கியத்தில் மட்டுமன்றி கலை வடிவங்களிலும் புதிய வேகத்தை தோற்றுவித்தது. சாதியத்துக்கு எதிரான போராட்டம் உச்ச நிலையில் இருந்த போது யாழ்ப்பாணத்தில் பரவலாக மேடையேற்றப்பட்ட "கந்தன் கருணை" நாடகம் ஒரு எடுத்துக் காட்டாகும். நாடகத்துறையிலும், நவீன குறியீட்டு நாடகங்கள் எழுத்தில் பல சிறப்பான முயற்சிகளை மேற்கொண்டது.

www.tamilarangam.net



இருப்பினும் இலக்கியத் துறையோடு ஒப்பிடும் போது கலை வடிவங்களின் வளர்ச்சி, மாற்றங்கள் கணிசமான அளவே நிகழ்ந்துள்ளன. இவை வேறாக ஆராயப்பட வேண்டியவை.

எவ்வா விதத்திலும் நாம் நோக்கும் போது ஈழத்து கலை இலக்கியம் சர்வதேச தமிழர் கலை இலக்கியத்தில் இருந்து தனக்கே உரிய சிறப்புப் பண்புகளால் வேறுபடுகிறது. அத்தோடு கலை இலக்கியம் மக்கள் திரளுக்குள் நல்ல கருத்துகளை கொண்டு செல்லக் கூடிய ஒரு சிறந்த ஊடகம் என்பதை மனம் கொண்டு சமூக உணர்வுடைய படைப்பாளிகள் இயங்கி வந்திருக்கிறார்கள். என்பதையும் நாம் கருத்தில் எடுத்தாக வேண்டும்.

அடுத்து யுத்த சூழலில் எமது கலை இலக்கியத்தை நோக்குவோம் :-

எண்பதுகளின் ஆரம்பத்தில் இருந்து இலக்கியத்தில் - கவிதைத் தளத்தில் அரசியல் கவிதைகள் புதிய முனைப்படைகின்றன. முன்னணியில் உணர்வுக் கவிதைகள் வருகின்றன. பிற்பட்ட காலம் அறிவியல், சுதந்திரம், சமூக விடுதலை, பெண் விடுதலை, இன ஐக்கியம் போன்றவற்றிற்கு அழுத்தம் கொடுக்கிறது. எண்பதுகளில் இயக்கங்களுக்குள் முளைத்த அராஜகங்களை வெளிப்படுத்தவும் கலை இலக்கியம் பின் நிற்கவில்லை. "சிந்திக்க தொடங்கி விட்டார்கள்" "மண் சுமந்த மேனி" போன்ற நாடகங்களும், செழியனின் "மரணம்" கவிதைத் தொகுப்பு, "புதியதோர் உலகம்" நாவல், "மரப்பிடிக்கும் இரும்புக்கூடாய்க்கும் மனிதாபிமானம் இருக்க நியாயமில்லைத்தான் அதற்காக மனிதத் தோலுக்குமா?..." என வீறு கொண்டு எழுந்த கவிதைகளும், "மரணத்துள் வாழ்வோ(ம்)ரின் கவிதைத் தொகுப்புகளும் எமது தேச கலை இலக்கியத்துக்கு உரமிடுகின்றன.

[மேலே குறிப்பிட்டவை சில தரவுகளே தவிர மொத்த கணிப்பீடு அல்ல]

இன்றைய எமது கலை இலக்கியத்தின் நிலை என்ன?.....

www.tamilarangam.net



தொடர்ந்து யுத்தத்துள் மூழ்கிறது தேசம். மக்களின் வாழ்வோ முன்னெப்போதும் காணாத அளவு வேதனை நிறைந்ததாகிவிட்டது. எமது வாழ்வு துன்பத்தில் இருந்து விடுபட்டதாக இருக்குமா? அமைதி, சுதந்திரம், சந்தோசம் எமது வாழ்விலும் கிடைக்குமா..? என்ற ஏக்க பெருமூச்சோடு, அச்சத்துடன் வாழ்கிறார்கள் எமது மக்கள். சமுதாயத்தின் எல்லா விதமான செயல் முறைகளும் துப்பாக்கியாலேயே இயக்கப்படுகின்றன. விடுதலை, சுதந்திரம் எம்மவர்களாலேயே எல்லை இடப்படுகின்றன. "மொத்தத்தில் மக்களின் கருத்தியல் தளம் துப்பாக்கியாலேயே பண்படுத்தப்படுகிறது."

அறிஞர்கள், சிந்தனையாளர்கள், போராளிகள், கலை இலக்கிய வாதிகள், மாணவர்கள் சமுதாயத்தில் நிகழ்த்தப்படும் அனர்த்தங்கள் கண்டும் மௌனித்திருக்க வேண்டிய நிர்ப்பந்தம்.

கல்லூரிகள், பல்கலைக் கழகங்கள், பொது நூலகங்கள் எல்லாமே எதிரிப் படைகளின் தாக்குதலுக்குள்.

ஆலயங்கள், மசூதிகள், தேவாலயங்கள் கூட படுகொலைக் கூடாரமாகிவிட்டது. நிலைமைகள் இப்படி இருக்கும் பொழுது. படைப்பாளிகள் சுதந்திரமாக இயங்கமுடியுமா என்பதற்கு; பதில்.. இல்லை என்பதாகவே இருக்கும். ஆயினும் நிழலாகத் தொடரும் படுகொலை மிரட்டலுக்கிடையிலும்; படைப்பாற்றலை தொழிலாகவோ, பொழுது போக்காகவோ கருதாமல்; சமுதாயத்துக்கு ஆற்ற வேண்டிய கடமைகளில் இதுவும் ஒன்று என்ற உணர்வோடு இயங்கும் படைப்பாளிகளும் எமது மண்ணில் இன்னமும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்கள்.

இத்தகைய சமுதாய நோக்குடைய படைப்புகள் வரலாற்றில் அன்றில் இருந்து இன்று வரை சமுதாயப் பரப்பினுள் அடையும் பெறுமானம் குறைவாகவே உள்ளது என்ற உண்மையையும் குறிப்பிட்டாக வேண்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதற்கான காரணங்கள்: சமுதாயத்தில் மேலாண்மை செலுத்தும் சக்திகள் தமது இருப்பை நியாயப்படுத்தக் கூடிய, தொடர்ந்து பாதுகாக்க கூடிய கலை இலக்கியங்களையே மக்களுக்குள் இன்னும் திணித்து வருகிறார்கள். இந்த கலை இலக்கியங்கள் மக்களின் மூடத்தனங்களுக்கும், குறுகிய சிந்தனைகளுக்கும் தொடர்ந்து தீனி போடுகின்றன.

மறுபுறம்; சமூகப் பொறுப்புணர்வுடைய படைப்பாளிகள் கட்சி அல்லது இயக்கம் சார்ந்த கோடுக்குள் முடங்கி இருந்து வருவது, உண்மையை மெல்லவும் முடியாமல் விழுங்கவும் இயலாமல் கட்சிக்காய், இயக்கத்திற்காய் பேனாவை நேர்மையாய் பிடிக்காமல் இருப்பது, சமூக முன்னேற்றத்திற்கான பணிகளில் இயங்குவதற்கு பதிலாக முற்போக்கு-பிற்போக்கு பேசிக் கொண்டிருப்பது, இது சமூகப் பொறுப்புணர்வுள்ளவராக இனம் காணக்கூடிய படைப்பாளியையும் அரசியல் வேண்டாம்! வெறும் இலக்கியம் போதும்! என்ற வட்டத்துக்குள் குறுக்கி விடுகிறது.

வெறும் கலை - இலக்கியவாதத்துள் மூழ்கும் படைப்பாளிகள் எப்போதும் சொல்வது; "கலைஞனோ, இலக்கிய வாதியோ சுதந்திரமானவன் அவனை யாரும் கட்டுப்படுத்தக் கூடாது! முடியாது!"

அதாவது இவர்கள் சொல்வது கலை இலக்கியவாதி கருத்தியல் ரீதியில் சுதந்திர இயக்கம் உள்ளவன் என்பதைத்தான். இந்தக் கருத்தில் இருந்து எந்த சமூகப் பொறுப்புணர்வுடைய படைப்பாளியும் பிறழ மாட்டான். அதே வேளை படைப்பாளிகள் இதையும் உணர்ந்தாக வேண்டும். அதாவது இன்றைய சமுதாயத்தில் எல்லா தீர்வுகளுமே அரசியல் ஆணையில்தான் நிகழ்த்தப்படுகின்றன. என்பதே அது. (29ம். பக்கம் பார்க்க)

www.tamilarangam.net



# துயக்கம் ஏன்?

-அருள்-

இலக்கே தெரியாமல்
துப்பாக்கி ஏந்தி
உயிரிழந்த உடலாக
மண்மீது சாய்ந்த
இளைஞர்களும் யுவதிகளும் --

கொள்கையும் தெரியாமல்
கோதாரியும் புரியாமல்
ஏனென்றும் அறியாமல்
உயிரைப் பலிகொடுத்த
அப்பாவிச் சனங்களும் --

கல்வி கொடுத்த அறிவும்
அறிவு வளர்த்த சிந்தனையும்
சமூகப் புற்றுநோயை
இனங்காண புறப்பட -
நிமிடத் தீர்மானங்களால்
பிணமாக விழுந்த
அறிவு ஜீவிகளும் --

தேச விடுதலை பாதையின்
பின்னால் -
விடுதலைக்கு தூரமான
வேறெதையோ நோக்கி
அற்புதமாய் உருட்டப்பட்ட
பகடைக் காய்கள் !

அடகு வைத்த குப்பியில்
அடங்கிப் போனது
ஆலவட்டக் குப்பலோ
தப்பிப் பிழைக்கிறது

இனத்தின் தன்- காவலர்க்கு
இனியும் தயக்கமேன்
எழுத்தின் விலையை
உலகிற்கு அறிவிக்க ?

www.tamilarangam.net


# இலக்கிய சந்திப்பு

## ஒரு விமர்சனப் பார்வை

இலக்கியச் சந்திப்புக்கு வயது இரண்டு வருடங்கள். மூன்று மாதங்களுக்கு ஒருதடவை தமிழ் சஞ்சிகை ஆசிரியர்களும், வாசகர்களும் ஜேர்மனியில் கூடுகின்றனர். ஆரம்பத்தில் ஜேர்மன் சஞ்சிகைகளை மட்டும் உள்வாங்கிய இச்சந்திப்பு இன்று பிரான்ஸ், ஒல்லாந்து, இலண்டன், நோர்வே, சுவிஸ் என்று விரிந்திருக்கின்றது. இச் சந்திப்புக்குச் சமூகமளிக்கின்ற பத்திரிகைகளில் பல "சமூக விஞ்ஞானம்", "சமுதாய மாற்றம்", இலக்கிய நோக்கு", இவற்றிற்கான தேடல்கள் ஆய்வுகள் பற்றி எல்லாம் அடிக்கடி பேசிக்கொள்கின்றனர்.

கடந்த ஆண்டு (1989) டிசெம்பரில் மேற்கு பேர்லினில் நடைபெற்ற 6வது இலக்கியச் சந்திப்பு பல சிறப்பு நிகழ்ச்சிகளை உள்ளடக்கியிருந்தது குறிப்பாக சண்முகரத்தினம் (சமுத்திரன்), சி.சிவசேகரம், வ.ஐ.ச ஜெயபாலன், நித்தியானந்தன் ஆகியோர் முறையே 'சமதர்மம்: கனவும், நனவும்', 'மொழியும் எழுத்தும்', 'தமிழர்களின் புலம்பெயர்வு', 'மலையகத் தமிழர்கள்' ஆகிய தலைப்புகளில் ஆய்வுகளை சமர்ப்பித்தனர்.

"இப்பத்திரிகையாளர் - வாசகர்கள் சந்திப்பில் காரசாரமான விவாதங்கள், விமர்சனங்கள், கருத்துப்பரிமாறல்கள் இடம்பெற்றதாக" இலக்கியச் சந்திப்பு பற்றி ஏற்கனவே பத்திரிகைகள் கூறிவந்துள்ளன. இரண்டாவது ஆண்டு நிறைவையொட்டி 1990 செப்டம்பரில் 29, 30 திகதிகளில் அலன் என்னும் இடத்தில் நடைபெற்ற 9வது சந்திப்பில் முதன்முதலாக நாமும் சந்தித்தோம். சிந்தனைக் கிளர்ச்சியுடன் கூடிய விவாதத்தை தூண்டும் நோக்குடன் "தேடல்களில் எழும் சில அடிப்படைப் பிரச்சனைகள்" பற்றிய எமது கட்டுரை நிகழ்ச்சி நிரல் ஒழுங்கின்படி எம்மால் வாசிக்கப்பட்டது.

www.tamilarangam.net


"தனமான விவாதங்கள், விமர்சனங்கள், கருத்துப்பரிமாறல்கள் ஊடாக ஒரு வளர்ச்சிப் படியில் நின்று தான் இச்சந்திப்பு நிகழ்கிறது" என்ற எமது ஊகம் ஏமாற்றத்தை தழுவியது.

"கட்டுரை கடுமையாக இருக்கிறது. எமக்கொன்றும் விளங்கவில்லை" என்ற குரல் பெண்கள் பகுதியில் இருந்து ஒலிக்கப்பட்டதைத் தொடர்ந்து கட்டுரை விவாதத்திற்கெடுக்கப்படவில்லை. பெண்நிலை வாதம், பெண்கள் விடுதலை பற்றிச் சிந்திக்க முற்பட்டுள்ள ஆரம்பகாலங்கள் இப்போது தான் அரும்பியுள்ளன. இச்சந்தர்ப்பத்தில் எமது கட்டுரை அவர்களுக்கு கடினமானது என்பதை நாமும் உணர்ந்தோம். "விளங்கவில்லை என்பதற்காக நாம் விட்டுவிடக்கூடாது விளங்குமளவிற்கு எம்மை வளர்த்துக் கொள்ள வேண்டும்" என்று ரஞ்சனியால் மொழியப்பட்டது. மேலும் தனிப்பட்ட முறையில் சில பெண்களுடன் பேசும் போது அங்கே சில ஞானப் பதங்களை நாம் இப்போது தான் அறிந்து வருகின்றோம். எங்கள் அறிவு நிலையில் உங்கள் கட்டுரை விளங்கக் கூடியதாக இல்லை" என்றும் கூறப்பட்டது. இவர்களது இக்கூற்றுகள் எங்கள் பெண்களின் வளர்ச்சியை நோக்கிய பார்வையை உணர்த்தி நிற்க; சில ஆண்கள், பெண்களின் கருத்துக்குச் சார்பாக தாம் கதைப்பது போன்று "இவை கட்சிக்குள் விவாதிக்கப்பட வேண்டிய விசயங்கள்" என்று மரபாகிப் போன தமது அன்றைய பல்லவியை ஒருமுறை மீட்டனர். இதயம் மிக்க மனித சமுதாயத்தின் பிரசவிப்பை நோக்கிய தேடல்கள் முயற்சியில் ஆர்வம் கொண்ட சிலர் தனிப்பட்ட முறையில் எம்மை அணுகிக் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டனர். ஆனால் ஒரு சிலர் எமது கட்டுரை பற்றி தனிப்பட்ட ரீதியிலான கருத்துப் பரிமாறல்களுக்கு கூட முற்படாமல் நிகழ்ச்சிகள் அனைத்திலுமே பொதுவாக மௌனம் சாதித்துச் சென்றவர்கள் தமது பத்திரிகையான 'தேனீ'யில்; "தேடலில் ஈடுபடுகின்றோம் எனக் கூறிக் கொண்டு 'மனிதம்' குழுவினர் தாம் பற்றிக் கொண்ட

www.tamilarangam.net


சில கோட்பாடுகளை விமர்சனமின்றி இறுகப்பற்றிக்கொண்டு தேடலில் ஈடுபட்டது கல்லைக்கட்டிக்கொண்டு நீந்த முயற்சிப்பது போல இருந்தது" என்று எழுதியிருப்பது விசனத்தை உண்டு பண்ணுவதாக இருக்கிறது. எமது தேடல் முயற்சியின் அடிப்படையும் ஆரம்பமும் பரந்துபட்ட விமர்சனமும் விவாதமுமே என்பதையே சுட்டி நிற்கின்றது. இவ் விசயத்தைக் கூட விளங்கிக்கொள்ளவில்லை இத்தேனீக்கள். மேலும் இத்தேனீக்கள் "இத்தகைய விசயங்களை விளக்குகையில் இலகுவான சொற்பதங்கள் பாவிக்கப்படவேண்டும் என்று வாசகர் ஒருவர் சுட்டிக்காட்டினார்" என்று வாசகன் சார்பில் கூறியிருக்கிறது.

இச் சந்திப்பில் இருந்து ஓர் உதாரணம்!

பா.வி. ஸ்ரீரங்கன் தமது உரையில் முஸ்லீம் மக்கள், மலையக மக்கள் தனித்தனி தேசிய இனங்களாகக் காணப்படவேண்டும் என்ற விவாதத்திற்குரிய புதிய பார்வையை முன்வைத்தார் அப்போது ஒரு வாசகர் "தமிழர்களை இப்படிப் பிரிக்கக்கூடாது என்று ஆத்திரத்துடன் கூறினார். இவ்வாசகருக்கு தேசிய இனமென்பதற்குரிய விளக்கம் தெரிந்திருக்கவில்லை. விளக்கம் கொடுப்பதற்குரிய சூழ்நிலையும் இருக்கவில்லை. கட்டுரை கடுமையானதாக இருப்பின் இலகுபடுத்தும்படி கட்டுரையாளரைக் கேட்டுக் கொள்ளலாம். அதேவேளை எந்தக் கட்டுரை, கட்டுரையின் உள்ளடக்கம் எப்போ, எங்கே யாருக்கு எளிமையாக இருக்கும் என்பதை வாசகனுக்கு விளங்க வைக்க வேண்டும். வளர்ச்சியை நோக்கி வாசகன் முன்செல்ல பத்திரிகை துணை நிற்க வேண்டும். பத்திரிகை என்ற தளத்தில் நின்று தேனீக்களும் இதைத்தான் செய்திருக்க வேண்டும். இதைக்கூட செய்யாத பட்சத்தில் இப்பத்திரிகைகள் "தேடல்", "ஆய்வு" என்று கூறுவதெல்லாம் மந்திரம் அறியாமல் செய்யும் பூசைக்கு ஒப்பாகும். தேடல், ஆய்வு என்பது நாகரீகச் சொற்கள் அல்ல தேவையுடன் எழுந்தவை, தேவையை உணர்த்துபவை.

www.tamilarangam.net


முதல் நாள் நிகழ்ச்சி அண்மையில் காலமான மலையக எழுத்தாளர் இராமையா அவர்களின் மௌன அஞ்சலியுடன் ஆரம்பித்தது. வாசகர் விமர்சனங்கள் உதிர்க்கப்பட்டபோது.... பத்திரிகைகளை நெறிப்படுத்தக்கூடிய ஆரோக்கியமான விமர்சனங்களினூடே சில கொச்சையான குறைப்பார்வைகளும், விசமத்தனங்களுங்கூட்டக்கப்பட்டன. "குழந்தைகள் இலக்கியம்" என்ற வகையில் சிறுவர் அமுதம் மிகுந்த அக்கறையுடன் கூரிய பார்வைக்குட்படுத்தப்பட்டது.

கவிதை பற்றிய விமர்சனப்பார்வையை நோக்கிய, அ. குமரனிடம் கவிதை இலக்கணம் பற்றிக் கேட்கப்பட்டபோது.......

"சாதாரணமாக ஒரு விளையாட்டை ஆரம்பிக்கும் போது அதற்கு கட்டுப்பாடுகள் வரையறுக்கப்படுவதில்லை ஆனால் அவ்விளையாட்டு வளர்ச்சியடைகின்ற கட்டத்தில் அதற்கென ஒரு கட்டுப்பாடு விதிக்கப் படுகிறது. இதே போன்றது தான் புதுக்கவிதை இலக்கணமும் வளர்ந்து வருகிறது. இது வரை அதற்கென்று இலக்கணம் வரையறுக்கப்படவில்லை இனிமேல் தான் வரையறுக்கப்படவேண்டும் என்று குறிப்பிட்டார்.

"நினைவுகளில் ராஜினி திரணகம" நிகழ்ச்சியில் ராஜினியின் முதலாண்டு நினைவு கூரப்பட்டு முதல் நாள் நிகழ்ச்சி முடிவடைந்தது.

மறு நாள் நிகழ்ச்சி:

'பெண்களும் சட்டங்களும்' என்னும் கட்டுரையுடன் பெண்கள் நிகழ்ச்சியாகவே ஆரம்பித்தது. கட்டுரை வாசிக்கப்பட்டதும் இக்கட்டுரை மீது விவாதத்தையோ கலந்துரையாடலையோ எப்படித் தொடங்குவது என்று திசையறியாமல் சபை சற்று நேரம் மௌனித்தது.

இச்சட்டங்கள் பெண்களுக்கு முழுமையான உரிமைகளை வழங்காவிட்டாலும் இச்சட்டங்களைக்கூட நடைமுறைப்படுத்த முடியாமல் இருக்கின்றதற்கான காரணம் என்ன?

"சமூகத்தில் மேலாண்மை செலுத்துகின்ற சாதிப்பிரச்சனை

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தல், ஆணாதிக்கம், பெண்ணடிமைத்தனம் போன்ற சமூக ஒடுக்குமுறைகளே". இவ் ஒடுக்குமுறைகளை தகர்க்கின்ற முயற்சியின் அடிப்படையிலேயே இக்கலந்துரையாடலை தொடரவேண்டும் என்று எம்மால் கூறப்பட்டது.

இவ்வடிப்படையில் விவாதங்கள் தொடரப்பட்டு, இறுதியில் பெண்கள் ஒன்றிணைந்து இப்போதிருக்கக்கூடிய சட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கான போராட்டங்களினூடாக தம்மை ஓர் அணியாகத் திரட்டி ஆணாதிக்கத்திற் கெதிராக போராட்டத்தை தொடர்ந்து சமூக மாற்றத்திற்கான போராட்டங்களுடன் தம்மை இணைத்துக் கொள்ள வேண்டும் என்ற சத்தான அம்சம் பலராலும் வைக்கப்பட்டது.

பெண்கள் நிகழ்ச்சிக்காக ஒதுக்கப்பட்ட நேரம் குறைவாக இருந்தமையும், நிகழ்ச்சியை விரைவாக முடிக்கும்படி "அரியண்டப்படுத்தியமையும்" பெண்கள் நிகழ்ச்சியின் முக்கியத்துவத்தை உணராத தன்மையும், அலட்சியப்படுத்திய போக்கையுமே காட்டியது. இத்தகைய போக்குகளுக்கெதிராக பெண்கள் போராடவேண்டும். இறுதி நிகழ்ச்சி ஜேர்மனியில் வரும் சஞ்சிகைகளுக்கான விமர்சனம். கடுமையான பல விடயங்களையும் நகைச்சுவையுடன் குழைத்து விமர்சித்தார் வி. நடராஜன். சில பத்திரிகைகள் கடுமையாக சாடப்பட்டன.

பல ஆயிரக்கணக்கான மக்கள் இந்தியப்படைகளால் கொலை செய்யப்பட்டமை;

இம் மக்களின் இழப்புக்காக ஒருதுளி கண்ணீர் கூட வடிக்காமை;

ஆக்கிரமிப்பு படையை அமைதிப்படை என்று அழைத்தமை;

இந்திய ஆக்கிரமிப்புப்படைக்கு E.P.R.L.F இறுதிவரை துணை நின்ற பல விடயங்கள்;

பத்மநாபாவுடன் சேர்ந்த 16 பேருக்கு அஞ்சலி செலுத்திக் கண்ணீர் வடித்த தேன், சிந்தனை, வெகுஜனம் போன்ற பத்திரிகைகளுக்கு

www.tamilarangam.net



நினைவுபடுத்தினார்.

ஏலையா, பிரவாகம், மண் போன்ற விடுதலைப்புலிகள் சார்புப் பத்திரிகைகளும் இதேபாணியில் விமர்சிக்கப்பட்டன. ஏலையா பிரேமதாசாவைப் பற்றி எழுதியமையையும், பாட்டாளிகளின் தோழன் என்று காட்டிக்கொள்வதற்காகவே 'ஏலையா' என்று பெயரிடப்பட்டுள்ளதையும் நகைச்சுவையுடன் சுட்டிக்காட்டினார். ஏனைய பத்திரிகைகளும் அப்பத்திரிகைகளின் தன்மைக்கேற்ப விமர்சிக்கப்பட்டன. கட்டுரையின் முழுமையில் இருந்து வரிகளைப் பிரித்தெடுத்து, அவ்வரிகளை விமர்சிப்பதில் கூடிய அழுத்தம் செலுத்தியமை விமர்சகரின் குறிப்பிடத்தக்க குறைபாடாகும். இதனால் இவரின் விமர்சனம் முழுமையற்று இருப்பினும் வாசகர்கள் மத்தியில் ஒரு திருப்தியை கொடுத்திருந்தமையை மறுத்துவிட முடியாது. வாசகர்களின் விமர்சனங்கள், கேள்விகளுக்குரிய பத்திரிகைகளின் பதில்கள் மேலும் வாசகர்களிடம் சிந்தனையை, கேள்வியைத் தூண்டுபவையாகவே அமைய வேண்டும். மாறாக அவர்களின் சிந்தனையை - கேள்வியை தடைசெய்பவையாக அமையக்கூடாது என்ற கருத்தையும் உதிர்த்திருந்தார்.

தொடர்ந்து வி. நடராஜனின் விமர்சனத்திற்கு சம்பந்தப்பட்ட பத்திரிகை ஆசிரியர்களின் பதில்கள் எதிர்பார்க்கப்பட்டன. புதுமை, தூண்டில், தளிர் ஏலையா, அக்கினி போன்ற பத்திரிகைகள் தவிர கடுமையாக விமர்சிக்கப்பட்ட தேன்சிந்தனை, வெகுஜனம் பத்திரிகைகளின் ஆசிரியர்கள் சரணடைவது போன்ற பாணியில் தம்மீது வைக்கப்பட்ட விமர்சனத்திற்கு பதிலளிப்பதற்குப் பதிலாக நடராஜனின் திறமையைப் போற்றிப் புகழ்ந்து தம்மை பெருந்தன்மையானவர்களாகக் காட்டிக் கொண்டனர்.

இலக்கியச் சந்திப்புக்கு வருகை தந்தவர்களில் பெரும்பான்மையோர் ஒரு சில இயக்கத்தைச் சார்ந்த இயக்கசக்திகளாக இருந்த

www.tamilarangam.net



போதும். அவர்களுக்கென்று தனித்துவமோ, ஆளுமையோ இருப்பதைக் காணமுடியவில்லை. இதற்கான பிரதான காரணம், நடுநிலை சக்திகளின் கருத்துப் பலத்தினால் அவர்கள் தார்மீக பலமற்றிருப்பதே என்பதை மேற்படி பத்திரிகை விமர்சனங்களுக்கான பதிலில் இருந்து காணமுடிந்தது.

தலைவர், செயலாளர் இன்றி ஒவ்வொரு இலக்கியச் சந்திப்பையும், வெவ்வேறு குழுக்கள் நிர்வகிப்பது, எந்த ஒரு இயக்கத்தினதோ, தனிமனிதர்களினதோ அல்லது குழுக்களினதோ ஆளுமைக்குட்படாமல் நடைபெற்று வருவது இவ் இலக்கியச்சந்திப்பின் குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

நிலைமைகள் இப்படியிருக்கும் போது ஜேர்மனியில் வாழும் சில தனிமனிதர்களோ, குழுக்களோ, பகிஷ்கரிக்கும் நோக்குடன் தமது வருகையை மறுப்பது ஆரோக்கியமானதல்ல. அத்துடன் எதிர்காலத்தில் ஒரு சில இயக்க சக்திகளிடம் இவ் இலக்கியச் சந்திப்பை கையளிப்பதற்கு துணை நிற்பதாகும்.

பங்கெடுத்துக் கொண்ட பத்திரிகைகளில் சில பத்திரிகை வெளியிடுவதற்கான நோக்கில் இருந்து வழுவி பத்திரிகை வெளியிடுவதையே நோக்கமாகக் கொள்கின்றன. இத்தகைய பத்திரிகைகள் தமது நோக்கை மாற்றிக் கொள்வதன் மூலமே இலக்கியச்சந்திப்பின் தரத்தை உயர்த்த முடியும் நோக்கமும் வலிமை பெறும்.

► ஆ.ரி குரு ◄

---

## நூல் அறிமுகம்

# தளிர்

"THALIR"
Arbeitsgemeinschaft für Ausländerfragen
H.M.Schleyerstrasse 15
7032 Sindelfingen , BRD

Konto Nr-42212849
Kreissparkasse BLZ-60350130

| | |
|---|---|
| வருட சந்தா | :- 25, |
| 6, மாத சந்தா | :- 13, |
| தனிப்பிரதி | :- 2.50 " |

www.tamilarangam.net


உலக நடப்பு

# கையேந்தும் அமெரிக்காவும் கைவிரித்த நேசநாடுகளும்




(Karikatur: H. Geisen)

வளை குடாவிற்கு அப்படி என்னதான் பீடை பிடித்திருக்கோ ? மீண்டும் யுத்தத்திற்காய் அருட்டப்பட்டுவிட்டது.

சென்ற ஆகஸ்ட் மாதம் 2ம் திகதி குவைத்தை ஆக்கிரமித்துக் கொண்ட ஈராக் மீது கடுமையான இராணுவ தாக்குதலை மேற்கொள்ளும் நோக்கில் அமெரிக்கப்படைகளும், அதன் கூட்டாளிகளும் சவூதிஅரேபியாவில் 'தயார்' நிலையில் வைக்கப்பட்டுள்ளன.

யுத்தம் மூளுமானால் அழிவுகள் முன்னைய காலங்களை விட பெரும் அளவில் பாதிப்பை ஏற்படுத்துவதாகவே இருக்கும் "3 மாத கால யுத்தத்துக்குள் முறையே 60 கோடி பொருளாதார அழிவுகளும், 65 ஆயிரத்துக்கும் அதிகமான உயிர் இழப்புக்களும் ஏற்படலாம்" என் பத்திரிகைகள் கணிப்பிடுகின்றன.

சமாதான முறையில் குவைத்தில் இருந்து படைகளை வெளியேற்றிக் கொள்ளுமாறு சீனா, ரஷ்யா, ஈராக்குடன் நேரடிப்பேச்சுவார்த்தைகளிலும் இறங்கியுள்ளன.

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்த மறுகணமே விழுந்தடித்து வந்த அமெரிக்க இராணுவமும் இவர்களுக்கு ஆதரவாக படைகள் அனுப்பிய பிரான்ஸ்,

www.tamilarangam.net



இங்கிலாந்து, ஜேர்மனி போன்ற நாடுகளும் ஆக மொத்தம் 3 இலட்சத்து 30 ஆயிரத்துக்கும் அதிகமான இராணுவத்தினரும், 2000 கவச வாகனங்களும் குவைத்தை அண்டிய சவூதி அரேபிய எல்லைகளில் குவிக்கப்பட்டுள்ளன. இதில் 2 இலட்சத்து 30 ஆயிரம் அமெரிக்கப்படைகள் என்பது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்கப்படைகள் எப்போதும் தன்மீது தாக்குதலில் இறங்கலாம் என்ற அச்சத்தில் 4 இலட்சத்து அதிகமான படைகளையும் 3500 கவச வாகனங்களையும் குவைத்துள் குவித்து வைத்திருக்கும் ஈராக் இன்னமும் 2 இலட்சத்து 50 ஆயிரம் படைகளை குவைத்துக்கு அனுப்பப்போவதாக அறிவித்துள்ளது



(Karikatur H. Geisen)

விளைகுடாவிற்குள் அதிகமான படைகளை குவித்திருக்கும் அமெரிக்கா தனது இராணுவ செலவினங்களை கூட்டு நாடுகளையும் பங்கிடு செய்யும்படி கேட்டதைத் தொடர்ந்து கூட்டு நாடுகள் ஈராக் மீதான இராணுவ தாக்குதல் நோக்கிலிருந்து பின்வாங்கச் செய்ததோடு அமெரிக்காவின் கோரிக்கையை மறுத்துவிட்டன.

எப்படியும் யுத்தத்தை நடத்தியாகவேண்டும் என்ற போக்கிலேயே 'அமெரிக்கா தனது படைப்பலத்தை மேலும் அதிகரிக்கப்போவதாக' அறிவித்துள்ளது. சவூதி அரேபியா, அடுத்து தன்னை தாக்கும் என்ற அச்சத்தில் அமெரிக்காவின் நடவடிக்கைகளுக்கும் தலை ஆட்டுகின்றன. சிரியாவும் ஈராக்கிற்கு எதிராக சவூதியில் நிலை கொண்டுள்ள தன் படைகளை 4 ஆயிரத்திலிருந்து 5 ஆயிரமாக அதிகரித்துள்ளது. 13 வருடங்களுக்கு பின்பு சிரியா, அமெரிக்க ஜனாதிபதிகள் 24 நவம்பரில்

www.tamilarangam.net



ஜெனிவாவில் சந்தித்தும் கொண்டது குறிப்பிடத்தக்கது.

இராணுவ நிலைமைகள் இப்படி இருக்க, ஈராக்மீது இராணுவ நடவடிக்கை நிகழுமானால் அது முஸ்லிம் நாடுகள் எதிர்காலத்தில் தலை தூக்க இயலாமல் போகும் அழிவுகளைக்கொடுக்கும். அத்தோடு 3ம் உலக யுத்தத்திற்கும் தூண்டுதலை கொடுத்துவிடும். இப்படி பல முஸ்லிம் நாடுகள் உட்பட உலக நாடுகளே அச்சம் கொள்கின்றன.

யுத்தத்தைத் தவிர்த்து அய்க்கிய நாடுகளுக்கூடாக தீர்வு காண்பதில் இன்று மேற்கு அய்ரோப்பிய நாடுகள் அக்கறை கொண்டுள்ளன. மொறாக்கோ மன்னர் தலைமையில் அரபு நாடுகளுக்கிடையில் ஒரு சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான முயற்சியும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

குவைத்திலிருந்து வெளியேற ஈராக் தலைவர் சதாம் குசைன் வைத்த நிபந்தனைகள் "பாலஸ்தீனத்தில் காஸா பகுதியிலிருந்து இஸ்ரேல் வெளியேறவேண்டும். லெபனாலிருந்து சிரியா வெளியேறவேண்டும்" போன்ற கோரிக்கைகளைப்பற்றி பின்பு ஆராய்வோம். முதலில் குவைத்தைவிட்டு வெளியேறு என்று அமெரிக்காவும், கூட்டுநாடுகளும் உறுதியாகக் கூறிவிட்டன. வளைகுடாவுக்குள் இருந்து அமெரிக்கப்படைகள் வெளியேறவேண்டும் என்ற கோரிக்கை அரபு நாடுகளில் குறிப்பாக ஜோர்டான் ஈராக், ஈரானில் மட்டும் அல்லாமல் அமெரிக்க மக்கள் மத்தியிலும் எழும்பத் தொடங்கியுள்ளது.

இதற்கிடையில் பணயக்கைதிகளாக ஈராக்கால் தடுத்துவைக்கப்பட்டிருந்த மேற்கு அய்ரோப்பிய நாட்டவர்களையும், ஜப்பானியர்களையும் விடுவிப்பதில் தனிப்பட்ட முறையில் ஈராக்குடன் அந்தந்த நாட்டுத்தலைவர்கள் பேச்சுவார்த்தைகளில் இறங்கினர். ஒஸ்ரியா, ஜேர்மனி, சுவிட்சர்லாந்து, ஜப்பான் நாட்டு பணய கைதிகள் அனேகமாக விடுவிக்கப்பட்டும் வருகின்றனர். மீதியாயுள்ள பிரான்ஸ், பிரித்தானியா அமெரிக்க பணயக்கைதிகளை விடுவதற்கு பெப்ரவரிவரை ஈராக் அவகாசம் கேட்டுள்ளது. இதற்குள்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சமாதான மூலம், ஐக்கிய நாடுகளுக்கூடாக ஈராக்படைகளை குவைத்தில் இருந்து வெளியேறச்செய்துவிட வேண்டும் என்பதில் ரஷ்யா, சீனா உட் பட பல அரபு நாடுகள் பேச்சுவார்த்தைகளில் அதிக அக்கறை காட்டு கின்றன.

குவைத்தை ஈராக் ஆக்கிரமித்து 3 மாதங்கள் ஓடி ஒழிந்தன. இந்த காலகட்டத்திற்குள் நிகழ்ந்த மாற்றங்கள் சதாம் குசைனின் அணுகு முறைகள் ஈராக்கின் பக்கம் ஆதரவை திரப்புவதாகவே உள்ளது. மறுபுறம் அமெரிக்கப்படைகள் வளைகுடாவை விட்டு வெ ளியேறிவிட வேண்டும் என்ற முழக்கம் அரபுநாடுகளிலும், அமெரிக்காவி லும் அழுத்தமாய் ஒலிக்கத்தொடங்கிவிட்டன.

# பாகிஸ்தான்

பாகிஸ்தானில் இராணுவ சர்வாதிகாரி ஜியா உல் ஹக் இன் மரணத்தை தொடர்ந்து இரண்டு வருட ங்களுக்குள் இரண்டு பொதுத்தேர்தல்கள் நிகழ்ந்துள்ளன.

ஊழல், அதிகார துஷ்பிரயோகம் போன்ற கார ணங்களைக் காட்டி ஆகஸ்ட மாதம் 6ம் திகதி மக்கள் கட்சியின் முன்னைய பிரதமர் பெனாசிர் பூட்டோவின் அரசு கலைக்கப்பட்டது. ஒக்டோபர் 24 இல் புதிய அரசுக்கான பொதுத் தேர்தலும் நடந்துள்ளது.

புதிய பிரதமராக அதிக பெரும்பான்மையை பெற் றுள்ள இஸ்லாமிய ஜனநாயக கூட்டு முன்னணியின் தலை வர் நவாஸ் சரீவ் பதவியேற்றுள்ளார். தேசிய பேரவைக் கான மொத்த 217 ஆசனங்களில் 50 ஆசனங்கள் மட்டுமே பெற்று பெனாசிர் பூட்டோவின் கட்சி படுதோ ல்வியைத் தழுவியுள்ளது.

இந்த தேர்தலில் ஊழல் நிகழ்ந்துள்ளதாக

www.tamilarangam.net


மேற்பார்வையிடச் சென்ற சர்வதேச கண்காணிப்புக் குழுவின் ஒரு பகுதியினர் அறிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

மேலும், தற்போது ஊழல் குற்றச்சாட்டில் சிறை வைக்கப்பட்டுள்ள பெனாசிரின் கணவர் தேர்தலில் வெற்றி பெற்றிருந்தும், தேசிய பேரவை உறுப்பினராக பதவியேற்க கராச்சி நீதிமன்றம் அனுமதி வழங்கியிருந்தும், புதிய அரசின் சபாநாயகர் அவரை பதவியேற்க விடாமை 'பாகிஸ்தானின் இன்றைய ஜனநாயகப் பண்பை' வெளிப்படுத்துகிறது.

## இந்தியா



இந்தியாவின் இன்று புதிய பிரதமராக சந்திரசேகர் காங்கிரசின் ஆதரவுடன் ஆட்சிக்கு வந்துள்ளார். இவர் ஜனதா தளத்திலிருந்து 56 க்கு மேற்பட்ட எம்.பி. களுடன் விட்டு வெளியேறி "சோசலிச ஜனதா தளம்" என்ற பெயரில் புதிய கட்சியை நிறுவியுள்ளார். இவருடைய கட்சியிலிருந்தும் 56 பேருடன், காங்கிரசின் 210 பேரும் ஆட்சியமைக்க போதுமானபடியால் ஜனாதிபதி வெங்கட்ராமன் காங்கிரசின் விருப்பத்திற்கேற்ப சந்திரசேகரை நியமித்

www.tamilarangam.net


துள்ளார். ஆயினும் "56 பேர் கொண்ட சிறு பான்மை கட்சியினுடையோர் இந் நாட்டின் பிரதமராய் வருவதை தான் விரும்பவில்லை" என்று வெங்கட்ராமன் தெரிவித்துள்ளார். உலக நாடுகளோ "இன்றுள்ள தலைமையிடம் நாம் சரியான வர்த்தக தொடர்பை மேற்கொள்ள முடியாமல் உள்ளது" எனத் தெரிவித்து வருகின்றன.

இந்தியாவில் இன்று புதிய தலைமை வேகமாக மாறுவதற்கு முன்பு இருந்து வி.பி.சிங் கணிசமான பங்கை செலுத்தியுள்ளார். வி.பி.சிங் நடந்த பொதுத் தேர்தலின் பின் பதவியேற்றதை தொடர்ந்து தமக்கு மக்களிடமிருந்து ஆதரவு சரிந்து வருவதை உணர்ந்து கொண்டார். இதனால் மக்கள் டமிருந்து தனது கட்சிக்கு ஆதரவை திரட்டும் நோக்கில் 'மண்டல் கமிசனை' அமுல்படுத்தினார். இவ் 'மண்டல் கமிசன்' மூலம் குறுகிய காலத்துக்குள் ஆதரவு பெறுவதுடன், தேர்தலில் கொடுத்த வாக்குறுதிகளை ஒவ்வொன்றாக நிறைவேற்றி வருவதாக பிரச்சாரமும் செய்தார். வி.பி.சிங் அரசு கருதியது போல் 'மண்டல் கமிசன்' இந்தியாவின் 80% தாழ்த்தப்பட்ட மக்களுக்கு சார்பாக உள்ளதால் அம் மக்களின் ஓட்டு கிடைக்கும் வாய்ப்பு உள்ளது.


ஜனதா தளத்திற்கு ஆதரவு அளித்து வரும் பாரதிய ஜனதா 'மண்டல் கமிசன்' மூலம். இந்துக்களின் ஓட்டு சிதற வாய்ப்புள்ளதை கருதி 'மண்டல் கமிசனுக்கு' எதிரான மாணவர்களது போராட்டத்துக்கு மறைமுக ஆதரவை வழங்கியது. அதேசமயம் அயோத்தி பிரச்சனையை மீண்டும் கிளப்பி தனது செல்வாக்கை தக்கவைக்க முயன்

www.tamilarangam.net

ாதுடன் அயோத்தி பிரச்சனையில் அரசு தலையிட்டால் தனது ஆதரவை விலக்கிக் கொள்ளப் போவதாக மிரட்டியிருந்தது. ஆனால் வி.பி. சிங் அரசு அயோத்தி பிரச்சனையை தடுக்காவிடின் 10 கோடி முஸ்லிம்களின் ஓட்டை இழப்பதுடன், மண்டல் கமிசனால் கிடைக்க இருக்கும் ஓட்டு சிதறும் என்பதனை கருத்திற் கொண்டு அயோத்தியில் அத்வானி உட்பிரவேசித்தபோது கைது செய்தது. பாரதீய ஜனதாவானது தனது இந்துக்களின் ஓட்டுக்களில் ஜனதா தளம் கைவைத்ததுடன், அயோத்தி பிரச்சனையில் தமக்கு எதிராய் செயற்பட்டதோடு, அத்வானியையும் கைது செய்ததால் தமது ஆதரவை வி.பி.சிங் அரசுக்கு விலக்கிக் கொண்டது.

ஜனதா தளத்திற்குள் வி.பி. சிங் இன்று செல்வாக்கினை இழந்திருந்தபோதிலும், மண்டல் கமிசனை அமுல்படுத்தியதால் மக்களிடம் ஆதரவு ஏற்பட்டுள்ளது. மண்டல் கமிசன் தாழ்த்தப்பட்ட மக்களின் சாதியத்தை ஒழிக்காவிடினும், குறைந்த சதவீதத்தினையாவது பொருளாதார ரீதியில் முன்னுக்கு கொண்டுவரும் என்பதால்; குறைந்தபட்சம் இது ஒரு சீர் திருத்த நடவடிக்கையாக இருப்பினும் கூட வரவேற்க கூடிய அம்சமாகும். அயோத்தி பிரச்சனையை தடுத்ததன் மூலம் முஸ்லிம்களின் பெரும்பான்மை ஓட்டும் வி.பி.சிங்கிற்கு

இந்தியாவில்:-
மக்கள்தொகை:மதவீதாசாரப்படி



www.tamilarangam.net



சிறப்பாக உள்ளது. மக்களிடம் வாக்கு சேகரிக்கும் நோக்கிலே மண்டல் கமிசனை அமுலாக்கியதோடு, அயோத்தி விவகாரத்தினை தடுத்திருந்தது. என்ற போதிலும்; அயோத்தி விவகாரத்தால்; தனது பிரதமர் பதவிக்கு ஆபத்து வரும் எனத்தெரிந்து கொண்டும்; உறுதியாய் வி.பி.சிங் நின்றது எதிர்காலத்தில் தொடர்ந்தும் வி.பி.சிங்குக்கு அரசியல் வாழ்வு உண்டு என கருத வாய்ப்பளிக்கிறது.

காங்கிரஸ் இன்று பொதுத் தேர்தலை சந்திக்கும் அளவுக்கு மக்களிடம் ஆதரவு அற்ற நிலையிலேயே உள்ளதால் தந்திரோபாயமாக சந்திரசேகர் தலைமை கொண்ட "சோசலிச ஜனதா தளத்திற்கு" ஆதரவு வழங்க முன்வந்துள்ளது. அத்தோடு வி.பி.சிங்கிற்கு மண்டல் கமிசனும், அயோத்தி விவகாரமும் எழுப்பியிருக்கும் சாதகமான 'அலையை' தணிக்கும் நோக்கிலேயே சந்திரசேகருக்கு ஆதரவு வழங்குகிறது. வி.பி.சிங்கிற்கு இன்று ஏற்பட்டிருக்கும் 'அலை' ஓய்ந்த பின்பு சந்திரசேகர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் ஒன்றை கொண்டு வந்து மீண்டும் பொதுத் தேர்தலுக்கூடாக ஆட்சிப்பீடம் ஏறலாம் என்பதே காங்கிரசின் இன்றைய உள் நோக்கமாகும்.

---

(13ம் பக்கத் தொடர்ச்சி) ஆகவே இன்றைய எமது வாழ்நிலையில் எந்தப் படைப்பாளியும் சமுதாயப் பிரச்சனைகளையும் தொடாமல் மக்களுக்கு பயன் படும் எந்த விதமான கலை- இலக்கியங்களையும் படைக்க முடியாது.

[இக் கட்டுரைக்கான சில குறிப்புகள் ஈழத்திலிருந்து வெளிவரும் தாயகம், மற்றும் மனஓசை போன்றவற்றிலிருந்து எடுக்கப்பட்டவை]

— கி. தீபன் —

www.tamilarangam.net

# சில முற்போக்குப் படைப்புக்களிற்கு

- கவிஸ்டா -

சில
முற்போக்கு
எழுத்தாள
சகோதரர்க்கு

உங்களின்
அணிப்புக்கள்
கண்டு
எமக்கு
ஆனந்தம்தான்

ஆயினும்
அடிக்கடி
ஐரோப்பிய நூல்களில்
சுற்றி சுற்றி
எம்மையே குற்றஞ்சாட்டும்
உங்கள் வன்மைதான்
சற்று நெருடுகிறது.

ஆமாம்
கலாச்சாரத்தை
உற்பத்தி பண்ணி எமக்கு
நிரந்தரமானதோர்
நிர்ப்பந்த
திணிப்பை ஏற்படுத்தியவர்
யார் ???
எங்கே
மறந்திருவீர்களா

கற்புகளை
நாம் படைக்கவில்லை
என்பது
நிச்சயமாக தெரியும்
நீ
மட்டும் உன்னை
விலை பேசாமல் விடலாம்

சகோதரிகளும்
தவறவிடுகிறார்கள்தான்
வாங்கியாவது
வாழ்க்கை
செழித்தலாம் என்பவர்
உள்ளனர்தான்
ஆனால்
நீங்கள்தான், நீங்களேதான்
சமுதாய
அகராதியின் பெண்மை
சுவடுகளை பதித்தவர்கள்
உங்கள் படைப்பின்
நிகழ்காலம் தான்
இப்போது
பண்பாடாய், கலாச்சாரமாய்
கற்புகளாய்
இன்றும்
பற்பலவாக காட்சிதந்தபடி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

கலாச்சாரம்
பாதுகாப்பதும்
கலியாண வியாபாரத்தை
வளமாக்குவதும்
நீங்கள்தானே
பிறகேன் எம்மை
விளிக்கிறீர்கள்
("கப்படிக்கு ஆண்கள்")
இதுதான்
தொடர்ச்சியாக ...

ஆனால் நம்மை
விற்பதற்கென்றே
அலைகிறார் பலர்
பேரம் பேசி பேசி

சில
விடயங்களில்
தனிமனிதனின் திருத்தம்
மட்டும் போதாது
சகோதரர்களா.

கடைசியாக
ஒன்று

எங்களின்
ஒற்றை நியாயங்களை
புதைத்துவிட்டு
உங்களின்
இரட்டை நியாயங்களிற்கு
விளக்கம்
தேடி அலையாதீர்கள் !

ஐயோ !
சகோதரர்களா
கலாச்சாரம் பற்றிய
உங்கள்
மறுதலிப்புத்தான்
எனக்கு
இழப்பமே


யுத்தத்தை நிறுத்து!
சுயநிர்ணய உரிமையை
அங்கீகரி !!
காத்தான்குடிப்
படுகொலை.
இலங்கையிலிருந்து-

Registered as a newspaper in Srilanka.
சரிநிகர்
இதழ்-3 செப்./ஒக்ரோபர் '90 விலை ரூ. 5.00

முகவரி: சரிநிகர்
MIRJE
No:6 Aloe Avenue,
Colombo-3,
Srilanka.




www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# பலனில்லை

ஒற்றை நியாயங்களுக்கான
மணிமாறனின்
பங்குபோடலை
பார்த்தேன்.
பண்பாட்டைக்
கட்டிக்காப்பதில் - நாம்
கருத்தாக இருக்கவில்லை.
கட்டிக் காப்பதற்காய்
நிர்ப்பந்திக்கப் படுகிறோம்
மெது புரிந்துகொள்ளுங்கள்-மட்டும்
பிரச்சினைக்கு தீர்வா என்ன?

பொருளாதார
கருத்து
சுதந்திரமற்ற நிலையில்
கிடந்த கால
கற்பித்தல்கள்
காலாவதியாகும் வரை
தொடர்வது
ஒற்றை நியாயங்களை
வாங்குவதற்கும்
விற்பதற்கும்
உங்களில் சிலரும்
எங்களில் சிலரும்
மட்டும்
சந்தைக்கு
செல்ல மறுத்தாலும்
விதி விலக்குகள்
சமூக மாற்றத்தை
நிர்ணயிப்பதில்லையே
பார்வையாளர்களாகவே
பழக்கப்பட்ட உங்களுக்கு
பார்த்திருக்கத்தான் தெரியும்
இந்த வெறும் காத்திருப்புக்கள்
பலன் எதும் அளிப்பதில்லை.

-சிந்து-


www.tamilarangam.net

www.tamilarangam.net



# தமிழ்த் தேசிய இனத்துள்
# குறுந்தேசிய வாதம்

> சென்ற இதழில் தமிழ் மக்கள் மத்தியில் விதைய -ப்பட்ட குறுந்தேசிய இனவாதத்தையும், அரசியல் கட்சிகள் இழைத்த வரலாற்றுத் தவறுகள் பற்றிய -மான உண்மைகள் சிலவற்றைப் பார்த்தோம்.

இதையடுத்த காலப் பகுதியில் தமிழரசுக்கட்சியின் திட்டமிடப்படாத முன்யோசனையற்ற தொடர்ச்சியான நடவடிக்கைகள் மூலம் (சிறீ எதிர்ப்பு, சத்தியாக்கிரகம்) தமிழ் மக்களை தம்மால் இயன்றவரை இலங்கையின் தேசிய அரசியலில் இருந்தும் சிங்கள முற்போக்கு சக்திகளிடமிருந்தும் பிரித்தே வைத்தனர். சிறீ எதிர்ப்பு போராட்டமான - வாகனங்களில் ஆங்கில எழுத்திற்குப் பதிலாக (புதிய தமிழ் எழுத்துக்களோ இலக்கமின்றி) சிங்கள சிறீ எழுத்துக்கள் பொறிக்கப்பட்டதால் 'தார்பூசும் போரை ஆரம்பித்ததன் மூலம் அன்று பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படாமல், ஒப்பந்த வடிவில் இருந்த பண்டாரநாயக்கா - செல்வநாயகம் ஒப்பந்தம் கிழித்தெறியப்பட்டது.

பண்டாரநாயக்கா, செல்வநாயகம் ஒப்பந்தம் செய்யப்பட்ட போது அதை இல்லாமல் செய்யும் நடவடிக்கையில் சிங்கள இனவெறியர்களும் அவர்களுக்கு தலைமை தாங்கும் வகையில் ஜே. ஆர். ஜெயவர்த்தனவும் பிரதான பாத்திரத்தை வகித்தனர். இவ்வேளை தெற்கில் இடது சாரிகள் ; ஒப்பந்தத்தை கிழித்தெறியும் சிங்கள இனவெறியின் முயற்சிகளுக்கு எதிராக, (ஒப்பந்தத்தை பாதுகாக்கும் பொருட்டு) தம்மால் இயன்ற அனைத்தையும் செய்தனர். இவ்வேளையில் ஒப்பந்தத்தைப் பாதுகாக்க வேண்டிய தமிழரசுக் கட்சியின் - அமிர் போன்றவர்களின் அர்த்தமற்ற சிறீ எதிர்ப்பு நடவடிக்கைகள் சிங்கள இனவெறியர்களின் கைகளைப் பலப்

-ருத்தி நாட்டின் இனக்கலவரத்திற்கு வழிகோலியது.

அமிர்தலிங்கம் 'தார்பூசும் போரை' ஆரம்பித்ததன் மூலம் அதில் தான் விட்ட தவறையும் (கட்சியின் பெரும்பாலானோர் விரும்பாத நிலையில்) அதன் விளைவையும் (ஒப்பந்தம் கிழிக்கப்பட்டமை, இனக்கலவரம்) 20 வருடங்களுக்கு பிறபாடு யாழ் நகர் கூட்டம் ஒன்றில் ஒப்புக் கொண்டார்.

சத்தியாக்கிரகப் போரை தமிழ்மக்களின் நியாயமான உரிமைகளை மறுக்கும் அரசுக்கெதிரான சட்ட விரோத நடவடிக்கையாக ஆரம்பித்து, பின் அஞ்சல் தலை முத்திரைகளை வெளியிட்டதன் மூலம் தமிழரசுக் கட்சி தனி இராச்சியத்திற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளுகின்றார்கள் என்ற குழப்பத்தை தமிழ், சிங்கள மக்கள் மத்தியில் ஏற்படுத்தியது. தமிழரசுக்கட்சி தமிழர் இராச்சியத்தை நிறுவுவதற்கான பிரிவினைக் கட்சியே என்ற கே. எம்.பி. ராஜரத்தினம் போன்ற சிங்கள இனவெறியர்களின் கூற்றையும், அவர்கள் பிரச்சாரத்தையும் வலுப்படுத்த உதவியது.

1956 முதல் 70 வரை நடைபெற்ற தேர்தல்களில் சிங்கள மக்களின் பெரும்பான்மைக் கட்சிகளுக்கு அறுதிப் பெரும்பான்மையின்றி வரும் போது தங்களின் பாராளுமன்றப் பலத்தால் சிங்கள அரசுகளை ஆட்சியில் அமர்த்தியும், வீழ்த்தியும் வந்த தமிழரசுக்கட்சிக்கு 70ம் ஆண்டு தேர்தலுடன் பாராளுமன்றத்துக்குள் புகுந்து விளையாடும் விளையாட்டுக்கு முற்றுப்புள்ளி வைத்தது.

சமஷ்டிக் கொள்கையுடனும் மலையக மக்கள் பிரச்சினைகளுடனும் ஆரம்பிக்கப்பட்ட தமிழரசுக்கட்சியின் 'அரசியல் தத்துவம்' (சமஷ்டி கிடைக்கும் வரை சிங்கள அரசாங்கங்களில் பதவி ஏற்கமாட்டோம்) 1965ல் யூ.என்.பியுடன்

www.tamilarangam.net



இணைந்த போதும், திருச்செல்வம் மந்திரியானபோதும் அரசும் காணத் தொடர்ந்தது. இதையடுத்து 70ம் ஆண்டுத் தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கூட்டணி 2/3 பெரும்பான்மையுடன் வந்தபோது "தமிழர்களைக் கடவுள் தான் காப்பாற்ற வேண்டும்" என்ற செல்வநாயகத்தின் வேதனைக்குரல் தமிழரசுக்கட்சியின் அரசியல் தள்ளாட ஆரம்பித்தது

தள்ளாடிய தமிழரசுக்கட்சிக்கு 1970ல் தரப்படுத்தல் ஓர் ஊன்றுகோலாகியது. தரப்படுத்தலைத் தொடர்ந்து உருவாகிய மாணவர் பேரவையிலும் அரசுக்கெதிரான நடவடிக்கைகளைத் தூண்டியும் அதனூடே ஒரு புதிய அரசியல் தளத்தையும் அமைக்க முற்பட்டது. அத்தோடு இக்காலகட்டத்தில் 'உணர்ச்சிக் கவிஞன்' காசி ஆனந்தன் போன்றோரை (ஆண்ட பரம்பரை ஆள நினைப்பதில் என்ன குறை என்றகோசத்தோடு) உள்வாங்கியதுடன் வங்காளதேச பிரிவினையை பிரதானப்படுத்தியும் சுதந்திரம் பத்திரிகை மூலமாக தனிநாடு பற்றிய கருத்துக்களையும் வெளிக்கொணர்ந்தனர். இந்நடவடிக்கைகள் மூலம் சரிந்துவரும் பாராளுமன்ற அரசியல் தூக்கி நிறுத்தியதுடன் புதிய தளம் அமைக்கப்பட்டது. 1974ல் புதிய தளமாக தமிழர் ஐக்கிய முன்னணி உருவாகியது 76ல் தமிழர் விடுதலைக் கூட்டணியாக பரிணமித்ததுடன் பிரிவினைக் கருத்துக்கள் பகிரங்கமாக முன்வைக்கப்பட்டது.

தமிழரசுக்கட்சியின் முன்யோசனையற்ற இன உணர்வுகளைத் தூண்டும் வீரப் பேச்சுக்கள், தமிழ் மக்களுக்கு பிரதான பிரச்சினையாகக் காட்டிய தனிச் சிங்களச் சட்டம் தரப்படுத்தல் போன்றவைகளுக்கு தீர்வு காண வழி தெரியாது குருட்டுத்தனமாக திட்டமிடப்படாது நடாத்திய வெளிவேட்டுப் போராட்டங்களின் தோல்விகள், இளைஞர்கள் [illegible]

[42ம் பக்கம் பார்க்க]

www.tamilarangam.net



# நிஜங்களின் தரிசனம்

ச.தில்லைநடேசன்.



அவனுடைய அப்பா இறந்து விட்டார். இப்போதுதான் டெலிபோன் வந்தது. நேற்று மலர்ந்த செம்பரத்தை இன்று வாடிக்கிடப்பது போல் அவனது முகம் வாடியது. தொண்டை கரகரத்தது. நெஞ்சு முட்டுவது போலிருந்தது. கண்களிலிருந்து நீர் எட்டிப்பார்த்தது.

அப்பா அவனுக்குத் தெரிந்தவரை கொழும்பிலிருந்து மாதம் ஒருமுறை வந்து அடிக்கடி கள்ளுக் கொட்டிலுக்குப் போய் தான் நடித்த நாட்டுக் கூத்திலிருந்து பாடலை இழுத்து விட்டு "படியடா... படியடா" என்று கத்தும் அப்பா "எங்களை மற்றவங்கள் இளைஞ்சவங்களா நினைக்கிறாங்கள் உங்கடை படிப்பிலைதான் எங்கட கௌரவமே இருக்கு"... என்று அண்ணாவையும் அவனையும் பார்த்து கத்தும் அப்பா நேற்று இறந்துவிட்டார். இல்லையில்லை போனகிழமையாகக்கூட இருக்கலாம்.

எப்போதும் குலுங்கி சிரித்தபடி, வட்டகாசுவடிவில் பெரிதாக குங்குமம் வைத்தபடி, கையை ஆட்டிக்கொண்டு வீட்டுக் கோடியில்

www.tamilarangam.net



நிற்கிற புளியமர நிழலில அக்கம் பக்க பெண்-டுகளோட மகாநாடு கூடும் அம்மா....

இப்பெல்லாம் அழித்தபடி வெள்ளைச் சேலையில கதறி அழுதபடி அவன் கண் முன்னே தோன்-றினாள்.

"ஐயோ!... அம்மா.. அப்பா....

அவன் குரல் வெடித்துச் சிதறியது.

பக்கத்தில் நின்ற ஒன்றுவிட்ட தமக்கை மல்லி-கா ஆறுதல் சொல்லிக் கொண்டிருந்தாள்.

"மோர் அழாதையடா எங்கட கொடுப்பனவு அவ்வளவுதான்"

அவன் ஏதும் பதில் சொல்லாதவனாய்...

"அப்பாவை இனி நான் காண ஏலாதா... அந்த உயரமான உருவத்தை, மயிர்க்காடுகளைத் தாங்கிய மார்பை, கலகலத்த சிரிப்பை,... அந்த சிம்மக் கு-ரலின் நாட்டுக் கூத்துப் பாட்டை....

ஐயோ...! அப்பா....

மீண்டும் ஒருமுறை குரல் ஒலி இறங்கியது

"மோர் எழும்பு பாசில இருக்கிறவைக்கு அறிவிக்க வேணும்"

அவன் சிலையாய் அசையாமல் யன்னலை வெறித்துப் பார்த்தபடியிருந்தான். வெளியில் வெயில் உறைப்பு ஞாபகப்படுத்தியது.

தம்பி, தங்கச்சிகள் என்ன பாடு படுதுகளோ.. நாட்டு நிலைமையால பள்ளிக்கூடமுமில்லை, படிப்பு-மில்லை. வீட்டுக்குள்ள அடைபட்டு பயந்தபடி இருக்கினம். ஊர்ச்சனமெல்லாம் தகப்பனைத் தின்னி பிள்ளையள் என்டு சொல்லப் போகுதுகள்....

www.tamilarangam.net



மோருக்கு நெஞ்சை கோடாலியால் வெட்டு-வது போலிருந்தது.

உப்பிடித்தான் சின்னவயசில தகப்பனை இழந்த மச்சான் ஒருக்கா சொல்லி அழுதவன் "என்னை எல்லோரும் தகப்பனைத் தின்னி -- தகப் பனைத் தின்னி --- என்டுறென்கள்... நான் என்ன என்-னை அப்பனைக் தின்டனானே --"

மோரி. மோரி என்று கூப்பிட்டு அழுத்த மல்லிகா டெலிபோனை எடுத்துச் சுற்றினள். செய்தி டெலிபோனில் பாய்ந்தது.

உறவினர்கள், நண்பர்கள், தெரிந்தவர்கள் ஒவ்வொருவராய் வரத் தொடங்கினார்கள். ரூபிஸ் என்று சேட் கொலரை தூக்கியபடி சொல்லும் வீடுதான் அது. கதவு திறந்தது. சின்ன விறாந்தை, உள்நுழைகை சின்ன அறை. மல்லிகா வீட்டு மா-ட்டுக் கொட்டிலை இதைவிட பெரிசு என்டு அடிக்கடி மோரி சொல்லுவது வழக்கம்.

ராஜன் வந்ததும் காரியங்கள் அருசுறுப்-பாய் நடக்கத் தொடங்கியது. சின்னத் துண்டில் ஆண்கள் இருக்க, பெண்கள் அறைக்குள் முடங்கினர். அறையின் அரைவாசியை ஏற்கனவே T.V, மேசை, கட்டில் யாவும் அடைத்திருந்தது.

வந்த ஒருவர் சுமிப் படத்தை திருப்பி வை-த்தபடி..

"நாடு விட்டு நாடு வந்தாலும் சடங்குகள், சம்பி-ரதாயங்களை மறக்கக் கூடாது" என்றார்.

வந்தவர்களில் தலை அரை வழுக்கை விழுந்த நாதலிங்கத்தார் மோருக்கு கதைகொடுத்தார்.

"என்ன தம்பி யோசிக்கிறாய், என்ன செய்

www.tamilarangam.net



பிறகா யோசனை"

குமார் தலையை நிமிர்த்திப் பார்த்தான். கண் சிவந்திருந்தாலும் முகத்தில் மரியாதை உணர்வு வந்து போனது.

"அண்ணை ஒருக்கா நாட்டுக்கு போய் வரட்டே எண்டு யோசிக்கிறன்"

ஊரில் பொம்பர் அடித்தால்கூட சனம் இவ்வளவு அதிர்ச்சி அடையாது. அவ்வளவுக்கு கேட்டவர்கள் உறைந்து போனார்கள்.

"என்ன தம்பி யோசிச்சுதான் கதைக்கிறியா"

"சின்னப்பிள்ளை கதையல்லை தம்பி நீ கதைக்கிறாய் இண்டைக்கு நாடு இருக்கிற நிலைமையில"

பென்சன் எடுத்தபிறகும் பிளாட்டில் ஏறிய வாத்தியார் இராசையா சொன்னார்.

"ஒரு காட், கீட் எண்டாலும் பரவாயில்லை இமிக்கிறன்ட் எண்டாலும் பரவாயில்லை தம்பி முட்டாசுப் பப்பிளைய வைச்சுக் கொண்டு.."

மல்லிகா சொன்னாள்.

குமாரின் மண்டை இறுகியது. பூமிப்பந்து வேகமாக சுழல்வது போலிருந்தது. என்ன வாழ்க்கை -- என்ன பிறப்பு... சொந்த தாய், தகப்பனை --- பிறந்தது முதல் அளைந்து வளர்ந்த மண்ணை — முற்றத்தை... கிணற்றடியை... பிரிந்து யாருக்காக வாழுறம்.

"தம்பி இதுதாண்டா வெளிநாட்டு வாழ்க்கை எந்த தாய் தகப்பன் வயிறு நொந்து உடம்பு நொந்து பெத்து வளர்த்துதுகளோ அதுகளை கட்டையில கூட முழிக்கேலாது"

போன மாதம் தாயைப் பறிகொடுத்த செல்வராஜா

www.tamilarangam.net


கண்கலங்க சொன்னான். வந்த ஒவ்வொருவரும் ஒரு கணம் தங்கள் நினைவுகளால் தங்கள் தங்-கள் ஊர்களுக்கும், வீடுகளுக்கும் திரிந்து வந்தார்கள். டெலிபோன் மணி அடித்தது. மல்லிகாதான் டெலிபோனை எடுத்தாள். குமார் வேலை செய்யும் ரெஸ்ரொரண்டிலிருந்து வந்திருந்தது. பிரெஞ்சு மொழி தெரிந்ததால் ராஜன் பேசினான். உடனடியாய் வேலைக்கு வரட்டாம்... ராஜன் நிலைமையை எடு-த்துச் சொன்னான். அவன் அதை ஏற்றுக் கொள்ளவில்லை. இன்றைக்கு புக்கிங் பார்ட்டி உட அப்படியும் குமார் வர வேண்டும் இல்லாவிட்டா அவன் இனி எப்போதும் வேலைக்கு வரத் தே-வையில்லை.

ராஜன் டெலிபோனை கீழே வைத்தான் குமார் முகம் வெறி பிடித்தது மாதிரி இருந்தது. மனம் குழம்பியது. என்ன செய்வது. அப்பா ஊரில் பாரேசமாக... அம்மா, தம்பி, தங்கைகள் சுற்றிவர அழுதபடி..... இவன் இங்கே..

வேலை போனது கூட வாடகை.... கரன்ட் பில்.... டெலிபோன் பில்... வீட்டுக்காரர்... கண் முன்னால் காசு சுற்றியது. இப்படி வேலை கிடை-க்கிறது கஷ்டம்.. வேலை கஷ்டம் எண்டாலும் சம்பளம் பரவாயில்லை... என்ன செய்வது....


சுற்றி இருந்தவர்கள், அவனைப் பார்த்தார்கள் மௌனமாக அவன் எழுந்தான். உடுப்பைப் போட்டான் எல்லோரிடமும் விடை பெற்று நடந்த போது, அவன் மனதின் அவலமும், கண்ணின் நீர்த்துளியும் மற்ற-வர்களின் பார்த்திருக்க நியாயமில்லைதான்..

-o-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net






மனிதம் தாங்கி வரும் ஆக்கங்கள் விசேடமாக வெளிநாட்டுச்
செய்திகள், படவிமர்சனங்கள் யாவும் பயனுள்ளவை. கடந்த இத
ழில் ஆசிரியர் குழுவினரின் கோட்பாடுகளின் வெளிப்பாடானது
தற்போதைய தேவையே

- நிருபா - யேர்மனி -

உங்களது முயற்சி நம்பிக்கையையும், உற்சாகத்தையும் தருகிறது
புலிகள் பற்றிய உங்களது பார்வையுடன் எனக்கு சில முரண்பாடு
கள் உண்டு இலகுவான நடையொன்றை கையாள முயலுகி
ன்றீர்கள். ஓரளவுக்கு அவற்றில் வெற்றி கண்டுள்ளீர்கள்.

N. சபேசன் - லண்டன்.

உங்கள் பத்திரிகையின் அட்டைப்படத்திற்கு விளக்கம் அளிக்க
லாமே. "ஏக்கம்" கவிதையின் எளிய நடையை ரசிக்க கூடியதாக
வுள்ளது. இன்று எல்லோரையும் அச்சுறுத்தி வரும் வளை
குடா நெருக்கடி என்ற தலைப்பு மூலம் சதாம் குசைனின் வரலாறு
தட்டிப் பார்க்கப்பட்டது மிகவும் உபயோகமாகவுள்ளது. "கரிய நகர்வுகள்"
என்ற கவிதை இன்றைய எமது நிலையை அழகாக சித்தரிக்கின்றது. அழ
கான கவிதை நடை. வளரட்டும் அவர் கவிதை எழுதும் பணி. "விதவை"
சிறுகதை, திரைப்பட விமர்சனம் எல்லாமே வரவேற்க கூடியது. பெண்
களின் துணிவு என்பதை வாசிக்கும் போது...எப்போ நாமெல்லாம் இப்படி
மாறுவோம் என்ற கனவு தான் மின்னுகிறது. பிறந்த நாள் வைபவத்
தை பொறுத்த வரை உங்கள் கருத்து சரியே. பிறந்த நாள் குழந்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தைகளுக்காக; குழந்தைகள் இடம் பெறும் விழாவாக இருத்தல் நன்று. திருமணத்தை பொறுத்த வரை குழம்புகிறீர்கள் போல் தெரிகிறது. காரணம் தாலிமட்டுமல்ல திருமணத்தில் நடை பெறும்; மணமகள் திரையிட்டு வருவதிலிருந்து, மாலை மாற்றல் - ஆண் இருந்து அணிதல் பெண் எழுந்து அணிதல் (மாலைமாற்றல்) - அம்மி மிதித்தல் [ஆணுக்கு தேவையில்லாத கற்பு பெண்ணுக்கு கல்லைப் போல் இருக்கணுமாம்]. பால், பழம் உண்ணல் - ஆண் உண்ட இலையில் ஆணுக்கு பின் உண்ணல் - அக்கினியை வலம் வருதல் - ஆணுக்கு பின் செல்லுதல் மோதிரம் நீரினுள் எடுத்தல் - பெண் ஆணுக்கு விட்டுக் கொடுக்க வேண்டும் - வரை எல்லாமே ஆணாதிக்க கலாச்சாரத்தையே நடைமுறைப்படுத்துகிறது. இவையாவும் அற்றுப் போக வேண்டும்.

மதுரா - இன்ரலாக்கன் -

வாசகரே!

உங்கள் விமர்சனம் ஆரோக்கியமானதாய் இருந்தது. பாராட்டுகள்! எமது பெண்கள் மத்தியில் ஏற்பட்டுவரும் விழிப்புணர்வை உங்கள் விமர்சனம் பிரதிபலித்தது. தாலி கட்டாமல் விடுவதால் மட்டும் பெண்கள் ஒடுக்கு முறைகளில் இருந்து மீண்டு விடமாட்டார்கள் என்ற உங்கள் கருத்து சரியானதே. அத்தோடு சடங்கு சம்பிரதாயங்கள் சார்பாக நீங்கள் குறிப்பிடுபவற்றையும் எம்மால் ஏற்றுக் கொள்ளக் கூடியதாகவுள்ளது. ஆயினும் இவைபற்றி விரிவாக ஆராய்வதல்ல எமது கட்டுரையின் நோக்கம்.

- ஆர்-குழு -

(35ம் பக்கத் தொடர்ச்சி)

இதனால் வளர்க்கப்பட்ட இளைஞர் இயக்கங்கள் இலங்கைக்கு சவாலாக வளர்ந்து வரும் ஆபத்து, இதைவிட மக்களின் நன்மை பற்றி புதிய கொள்கைகளோ, வேலைத்திட்டங்களோ, போராட்டங்களோ இல்லா நிலையில் தேர்தலில் வெற்றியீட்டும் நோக்குடனேயே தமிழர் ஐக்கிய முன்னணியும் இந்தியக் கூட்டணியும் உருவாகியது.

தொடரும்......

www.tamilarangam.net



# றெகே இசையும்



ஆங்கிலத்தில்: ரீங்ஙா பொறுஸ்

தமிழ்: தேவா (சுவிஸ்)

# பொப்மாலியும்

## றெக்கே இசையின் வளர்ச்சி:

ஜமேக்காவின் இசையல்லாத புதிய இசை அலைகள் அமெரிக்காவின் நியூ ஓர்லியன்ஸ், மியாமி போன்ற அருகாமை ஒலி பரப்பு நிலையங்களிலிருந்து கிங்ஸ்ரன் தெருக்களில் 'ரான்ஸிஸ்டர்' வாயிலாக எட்டியது. இந்த இசைகள் அக்காலத்தில் பிரபல்யமான (F) பற்ஸ் டொமினோ (Fats Domino), புறூக் பென்டன் (Brook Benton) போன்றவர்களின் இசையாகும். இக்கால கட்டத்தில் உள்ளூர் இசையில் வளர் இல்லாத காரணத்தால் ஜமேக்காவின் முரட்டு இளைஞர்கள் மாலைப் பொழுது போக்கிற்காக இவ்விசைகளையே பயன்படுத்தினர். இவர்களது பொழுது போக்கிற்கு பெரிய 'லொறி'களில் ஒலிபெருக்கிகளுடன் 'டிஸ்க் ஜொக்கிகள்' (இசைத்தட்டுக்களை தேர்ந்தெடுத்து கோர்வையாக - இசைக் கலவையை அமைப்பவர்கள் - இது ஒரு பிரத்தியேக கலை) தங்களுக்குள் போட்டியாக புதிய பாடல்களை அறிமுகப்படுத்தி இளைஞர்கள் மத்தியில் புகழ்பெற்றனர். 1960களில் அமெரிக்காவின் இசைப்போக்கில் ஏற்பட்ட மாறுதல்கள் காரணமாகப் பொப் பாடல்கள் மென்மையானதாக மாற தங்களது வேகத்திற்கும், தீவிரத்திற்கும் இவ்விசைகள் பொருத்தமில்லாமல் போகவே புதியதும்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net


தீவிரமானதுமான இசையை இவ் இளைஞர்கள் தேட ஆரம்பித்தனர்.

ஜாஸ் இசைக்கலைஞர்களான ஸ்கட்டலாட்டீஸ் (skatallities) என்பவர்களால்; ஸ்கா (ska) என்ற இசை ஓடியளவு உலோகக்கருவிகளுடன் வேகமானதாகவும், 'ரிதம் புளூஸ்' என்பது 'றொக்கன்றோல்', 'மென்றோ' கலப்பாகவும், ரஸ்தபாரியன்களின் இசை பெரிய மேளங்களாலும் ஆபிரிக்க இசைகளின் சேர்க்கையைக் கொண்டதாவும் உருவமைக்கப்பட்டது. 1963 இல் சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு சந்திப்பு ஸ்கட்டலாட்டீஸ்களுக்கும், அரச கிடமைப்பு திட்ட குடியிருப்புகள் பகுதியில் புகழ்பெற்ற திறமையான மெல்லிசைப் பாடகர்களான Walers போன்றோருக்கும் மிடையில் ஏற்பட்டது. இதன் பின்னர்தான் இவான் (Ivan) போன்ற முரட்டு இளைஞர்கள் எல்லோரும் மேடைப்பாடகர்களாக முடிந்தது.

Jail hause keep empty
Rudie gets heathy
Baton Sticks,..........
சிறைகள் வெறுமையாக
அடக்குமுறைக் அடங்காதவர்கள் பெருத்து நின்றனர்.
குண்டாந்தடி குறுகியது
முரடர்கள் எடுத்தனர்.
...... இந்த இளைஞர்களை வெல்ல முடியவில்லை.
ஆம் அது பிழைதான்.
Predicition:
மக்கள் கட்டற்றுப் போகிறார்கள்
அவர்கள் முரடர்களாகிறார்கள்
"அறிவாளிகளாலும், சீர்குலைந்தவர்களாலும்
(மக்களிடமிருந்து) மறைக்கப்பட்டது அம்பலப்படுத்தப்படும்.

என்ற பாடல் "புதிய" ஆனால் பாழடைந்த சேர்ப்பகுதி இளைஞர்களின் துன்வை மனோநிலையை கோடிட்டு காட்டிய தொடல்லாமல் இன்மையான இசையில் ஓர் பயமுறுத்தலாய் அமைந்தது.

---

சில வருட கடைவெளிகளில் ஸ்கா (Ska) இசை Rock-Steady என்று இசையாகப் படிந்து 1967-68 இல் றேகே இசையாக உருமாறியது. இவ் இசையில் முரட்டு இளைஞர்களின் செல்வாக்கு அதிகரிக்க, பழைய வெளிகளி லி பூட்டி ஒலிபரப்பும் முறை அகற்றப்பட்டது. பாடல்கள் அடங்கிய இசைத்தட்டாக அதிக அளவில் விற்பனையானது. ஆனால் வானொலியில் இவ் இசை தடைசெய்யப்பட்டிருந்தது. ஜமேக்காவின் தேசிய கலாச்சாரம் பிளவுபடத்தொடங்கியது. முரடர்கள்-அமைதியானவர்கள் என இரு வேறு முகாங்கள் உருவாகத்தொடங்கியது. முரடர்கள் தங்கள் தலை மயிரை சடாமுடிபோல் வளர்த்துக் கொண்டு சர்வதேசரீதியில் சிறு கவனத்தை ஈர்த்தவே "அமைதியான" போக்கினர் சிறுது சிந்திக்கத் தொடங்கினார்.

நாடு பல்வேறு வழிகளிலும் பிரச்சனைகளை எதிர்நோக்கியது 1969 இல் ஜமேக்கா உலகின் எந்த நாட்டிலுமில்லாதவாறு வருமானத்தில் மாபெரும் ஏற்றத்தாழ்வைக் காட்டியது. (ஒரு சாரார் மிக அதிக வருமானத்தைப் பெறுபவர்களாகவும் மறுசாரார் வாயிற்கும் கைக்கும் என்று நிலையில் தாழ்ந்த வருமானம்.) "வெள்ளையர்களுக்கு சொர்க்கமேதுவோ அதுவே கறுப்பர்களுக்கு நரகம்" என்று றேகேப் பாடல் மூலம் இந்த இழிநிலையை Gregory Isaacs என்று பாடகன் படம் பிடித்துக் காட்டியுள்ளான்.

கணக்கற்ற இளைஞர்கள் வேலைவாய்ப்பின்றியும் இந்நாட்டை விட்டு வெளியேற வழியின்றி இருந்தாலும், அமெரிக்காவின் கலாச்சார ஆதிக்கம் ஆங்கில மக்கள் தொடர்புசாதனங்கள் வழியாக இவர்கள் மீது திணிக்கப்பட்டது. ஆனால் இவர்கள் இவற்றை ஏற்றுக் கொண்ட ஏகாதிபத்திய தாசர்களாக மாறாமல் றேகே என்ற இசையால் அமெரிக்கர்களை கதிகலங்கச் செய்தனர். பழைய றேகே இசைத்தட்டுகளின் உறைகளில் கைமுஷ்டியை இறுகப் பற்றியவாறு பலகோணங்களிலும் அதற்கிசைவாக தலைப்

www.tamilarangam.net



இரு மக்கள் குரல் (Voice of People), துப்பாக்கிரவை (Bullet) பழிக்குப்பழி (Tit for Tat), பட்டினிநகரம் (Hungry town) போன்ற பாடல்கள் அடங்கிய இசைத்தட்டுக்கள் வெளிவந்தன. உலகமக்களின் ஏகாதிபத்திய எதிர்ப்புணர்வை ஜமேக்கா ஆக்ரோசமாக இவை மூலம் வெளிப்படுத்தியது. அமெரிக்க கறுப்பின மக்களின் எழுச்சி அலை கிங்ஸ்ரனை எட்டிய போது ஏற்கனவே தெளிவுபெற்றிருந்த கிங்ஸ்ரன்நகர மக்கள் இதனை சரியாகவே புரிந்து கொண்டனர்.

றெகே இசை ஏனைய இசைவடிவங்களைப் போலவே தனது பாதிக்கும் கருத்தாடிமற்ற பொப்பாடல்களையும், காதல் பாடல்களையும் தோற்றுவித்தாலும் ஒரு வியக்கத்தக்க குணாம்சமாக புகழ்பெற்ற றெகே கலைஞர்கள் எல்லாரையும் ஆதிக்க வர்க்க-(அடக்கும்வர்க்கம்)திற்கெதிரான போராளிகளாக விளங்கவைத்தது. பழைய ஜமேக்கர்களின் சிக்கலற்ற வாழ்க்கைமுறைக்கு திரும்ப முடியாது - திரும்பவும் விருப்பமில்லாது போன இவான் (Ivan) போன்ற ஆயிரக்கணக்கான இளைஞர்களை றெகே இசை கவர்ந்திழுத்தது. றெக்கே இசையின் வளர்ச்சிக்கு இந்த இளைஞர்களின் பங்களிப்பு பெரியளவில் அமைந்ததோடு பொருளாதாரரீதியாகவும் வளர்ச்சியடைந்துவரும் கிங்ஸ்ரன் நகரம் மாபெரும் ஒலிப்பதிவுக் கொம்பனியையும் அமைத்துக் கொண்டது. இதே காலகட்டத்தில் உள்ள ஏனைய கரபியன் நாடுகளுடன் ஒப்பிடும்போது இதுவோர் அசுர சாதனையாக இருந்தது. இதேவேளை இவ்விசையின் கருத்தியலிலும்ஓர் புதிய பரிமாணமும் சேர்ந்து கொண்டது.....

The Rastafarian:-

Cause I feel like
Bombing the Churches
Now that you know,
The Preacher is lying.

So who is going to stay at home
When the Freedom Fighters.
-are Fighting.
Talking Blues
"BOB MARLY"

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"ஒரு தேவாலயத்திற்கு குண்டு வீச நினைக்கின்றேன்,
இப்போது உங்களுக்குப் புரிந்தது பாதிரி பொய் சொல்கிறான் என்று.
விடுதலைப் போராளிகள் போராடிக் கொண்டிருக்கும் போது
யாரால் அதில் பங்கு கொள்ளாமல் வீட்டில் இருக்க முடியும்."

அநேகமான தேசத் தலைவர்கள் எல்லாரும் ரஸ்தபாரியன் கொள்கைகளை ஏற்றிருந்தனர். கிறிஸ்தவ மத பிற்போக்குத்தனங்களுக்கெதிரான அவர்களது போராட்டம் சில நேர்மாறான விளைவுகளைக் கொண்டிருந்த போதும் எல்லாமே பாதகமான விளைவுகளை ஏற்படுத்தவில்லை. அமெரிக்க தாசனும் முதன்மந்திரியாகவும் இருந்த சேகா போன்றவர்கள் 'விடுதலை'யடைந்த ஜமேக்கா ஓர் சாந்தமானதும் கிறிஸ்தவ மதப்பற்றுடையது மான ஒரு நாடாக மாற வேண்டும் என எதிர்பார்த்ததற்கு மாறாக இந்த ரஸ்தபாரி "கலகக்காரர்கள்" தாங்களும் மாறாமல் மற்றவர்களையும் குழப்படுத்திக் கொண்டிருக்கிறார்களே என அங்கலாய்த்தனர்.

ரஸ்தபாரியன்கள், கிறிஸ்தவமதக் கோட்பாட்டின்படி "இவ்வுலகில் படும் துன்பங்களுக்கெல்லாம் மறு உலகில் ஒரு நல்ல விடிவு கிடைக்கும்" என்று நம்பிக்கையை பொறுமையுடன் ஏற்க தயாராகவில்லை. இவ்வுலகில் துன்பங்கள் இருக்கின்றதென்றால் அந்த வாழ்க்கைமுறையை மாற்றியமைப்பதற்கான வழிமுறைகளையும் இங்குதான் இனங்காணவேண்டும் என்பதை அவர்களால் சரிவர புரிந்து கொள்ளப்படவில்லை. சுதந்திரத்தின் சரியான பரிமாணம் அவர்களுக்குப் புலனாகாது இருந்தபோதும் எதை எதிர்த்துப் போராட வேண்டுமென புரியாத போதிலும் ஆபிரிக்காவில் இருந்து கடத்திவரப்பட்டு அடிமைக்கூலிகளாக அடைபட்டுக்கிடந்தவர்களுக்கு ஆபிரிக்க கறுப்பின மக்களின் விடுதலை என்று காரணம் போராடுவதற்கான நியாயமான காரணமாக உணரப்பட்டது.

www.tamilarangam.net


## மனிதனைத் தேடி

« நாங்கள் மனிதர்கள் » - ஆம்
தெளிவாக , பெருமையுடன்
சொல்லிக் கொள்கிறார்கள்
ஆறறிவு
மனிதாபிமானம்
சுதந்திரம் தமக்குண்டாம்
நேற்று வரையில்
நானும் நம்பினேன் - எல்லோரையும் போல
இன்றோ
உரிமைகளற்ற ஓரினம்
அடிமைகளான ஓரினம்
ஒடுக்கப்படும் ஒரு வர்க்கம் - வாழ்கிறது
மண்ணுலகில்
'மனிதர்களே!'
வரலாற்று அகராதியில்
நாங்கள் எழுதுவோம்
ஆறறிவு - அது
மனிதனுக்குரியது.
மனிதாபிமானம் - அது
மரணித்து விட்டது.
சுதந்திரம் - அது
அடிமையாய் வாழ்வதற்கு
ஆனாலும்
நாங்கள் சொல்லிக் கொள்வோம்
« நாங்கள் மனிதர்கள் » - ஆம்
கற்கால மனிதர்கள்.

• புவி.

www.tamilarangam.net



நோர்வேயில் சில பெண் எழுத்தாளர்களின் முயற்சியால் « சக்தி » எனும் சஞ்சிகை வெளிவர ஆரம்பித்துள்ளது. இதன் முதலாவது இதழ் பற்றி பாலமோகன் எழுதியுள்ள இவ் விமர்சனம் ஆரோக்கியமான விவாதங்களுக்கு துணைபுரியலாம் என எதிர்பார்த்து இங்கு வெளியிடுகிறோம்.

– ஆர் கு –

# சக்தி

## ◄ ஓர் விமர்சனம் ►

« சக்தி » முதலாவது இதழ் படித்தேன்.

சிறு திணமான உள்ளடக்கம். அழகான உருவமைப்பு. பாராட்டுக்கள்!

ஒரு இதழில் வைத்தே சக்தியை மதிப்பிட்டுவிட முடியாது என்றும் முதல் இதழ் அதன் பாதைபற்றிய கேள்வியை என்னிடம் எழுப்பியுள்ளது.

ஆண் எதிர்ப்பா, ஆணாதிக்க எதிர்ப்பா சக்தியின் பாதை? என்பதே அது!

மேலும் "மொழியில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு" என்ற கட்டுரை சில புதிய விடயங்களை தர முனைவது சிந்தனையைத் தூண்டத்தக்கதாக அமைந்துள்ளது. பயனுள்ள கட்டுரை!. இக் கட்டுரையும் என்னிடம் ஒரு கேள்வியை எழுப்பியுள்ளது.

« சொற்களில் ஏற்படும் கருத்திழிவு மொழியின் குறைபாடா, சமூக அமைப்பின் குறைபாட்டின் பிரதிபலிப்புகளா? »

இவ் இரு அம்சங்களுமே இவ் விமர்சனத்தின் உள்ளடக்கமாகும்.

-நூல் அறிமுகம்-

"SAKTHI", boks 127, 1432 AAS-NLH ,NORWAY

சக்தி

சந்தா விபரம் (ஆண்டு)
ஸ்கண்டிநேவிய நாடுகள் – NKr 60,-
ஏனைய நாடுகள் – NKr 70,-

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சக்தி இதழ்-1 பக். 12 இனை புரட்டுங்கள். ஒரு துணுக்கு.

« ஆண் - நான் உம்மை காதலிக்கிறேன்

பெண் - சுத்தி வளைக்க வேண்டாம்
உம்முடைய விலை என்ன ?

ஆண் - ??? »

ஆக, ஆண்கள் இப்படி, பெண்கள் இப்படி என்பதா?

ஆக "ஆண்" என்ற இடத்தில் ஒரு ஆணின் பெயரும் பெண் என்ற இடத்தில் ஒரு பெண்ணின் பெயரும் இடப்படும் போதே ஆணாதிக்கத்தை அர்த்தப்படுத்துகிறது. மேலும் நல்ல நோக்கமுள்ள ஆண், பெண் இருவருக்குமிடையில் அர்த்தமுள்ள பிணைப்புகளை ஏற்படுத்தும் காதல் போன்ற மானிட உணர்வுகளையும் இத் துணுக்கு அடித்துச் சென்றுவிடுகிறது.

ஆக, எஞ்சுவது ஆண் எதிர்ப்பும், வரட்டுத்தனமுமே!

சக்தியின் "நமது கடமை" பகுதியில் 10 ம் பக்கம்.
'வெளிநாட்டில் வெளிவரும் சஞ்சிகைகள் ஆண்களின் கருத்துக் களையும் கண்ணோட்டங்களையும் கொண்டுள்ளன' என்கிறார்; 'ஆண்களின் பார்வையில் பெண்களின் பிரச்சினைகளை தெரிவிப்பன' என்கிறார். அதேநேரம் 'தப்பித்தவறி வரும் பெண்களின் ஆக்கங்களிலும் சில (ஒரு சில தவிர) இருக்கும் ஆணாட்சிக்கு ஆலவட்டம் பிடிப்பனவாக உள்ளன' என்றும் அவரே ஏற்றுக் கொள்கிறார். இக் கருத்துக்களை தொகுத்துப் பார்த்தால் தவறு எங்கே இருக்கிறது என்பது புரியும்.

ஆணாதிக்கம் என்பது திணிக்கப்பட்டது மட்டுமல்ல; 'ஏற்றுக்கொள்ள' வைக்கப்பட்டதுமாகும். அதாவது கலாச்

www.tamilarangam.net



சாரம், சமூக நடைமுறை என்ற தளங்களில் பெண்களை கருத்தியல் ரீதியில் ஏற்றுக்கொள்ளும்படி செய்யப்பட்டதுமாகும். எனவேதான் அத் தளத்தில் நின்றுகொண்டு சிறிது வித்தியாசமாக சிந்திக்க (அல்லது எழுத) துணியும் பெண்கள் சிலரும்கூட (தமக்கு தெரிந்தோ தெரியாமலோ) ஆணாட்சிக்கு ஆலவட்டம் பிடிக்கிறார்கள் என்பது புலனாகும். இதேபோல ஆண்கள் சிலரின் படைப்புகளும் வெளிவருகின்றன.

ஒட்டுமொத்தமாகவே ஆண்களின் கருத்துக்களையும் கண்ணோட்டங்களையும் கொண்டே பத்திரிகைகள் வெளிவருகின்றன என்பது குறைப்பார்வை ஆகும். இங்கு எஞ்சுவது ஆண் எதிர்ப்பே! மேற்கூறியவகை படைப்புகள் வெளிவரும்போதே விமர்சனங்களை முன்வைத்து, விவாதித்து சரியான கருத்துக்களுக்கு வந்தடைய உழைப்பதே பிரயோசனமானது. ஆண், பெண் என அணிபிரிந்து அல்ல!

இனி கட்டுரைக்கு வருவோம்.

« மொழியில் பெண்களுக்கு எதிரான பாகுபாடு »

இதில் கட்டுரையாளர் மொழியின் ஒரு குறைபாட்டை சிறப்பாகவே சுட்டிக்காட்டுகிறார். Surgeon, Lawyer ---- போன்ற சொற்கள் (தமிழிலும் கூட) ஆண்பாலாரை மட்டும் குறிப்பதையும் அல்லது இதற்குரிய பெண்/ஆண் பால் சொற்கள் இதுவரை உருவாக்கப்படவில்லை என்பதையும் தெளிவுபடுத்துகிறார். இது சொல் உருவாக்கத்தில் ஓர் இருட்டடிப்பு என கூறலாம். இது மொழிக்கு ஏற்பட்டுள்ள

www.tamilarangam.net



குறைபாடாகும். இவர் இன்னுமொரு விடயத்தையும் முன்வைக்கிறார். ஆண்களை உயர்த்தி சொல்வதற்கான அர்த்தத்திலுள்ள சொற்கள் அதிகமாக உள்ள அதே நேரம் பெண்களை இழிவுபடுத்தும் சொற்கள் கூடுதலாக உருவாக்கப்பட்டுள்ளன என்கிறார். (உ-ம்: 'விபச்சாரி')

நிலைத்து நிற்கும் தந்தைவழி சமூக அமைப்பும் ஆணாதிக்கமும் மொழியின் காலங்காலமாக குறிப்பிட்ட அளவு தாக்கம் செலுத்தியிருக்கும் என்பதை மறுக்கமுடியாது. இதுவே மேற்கூறிய குறைபாட்டை உள்ளே அமுக்கி மேலே பூசி மெழுகிவிடுகிறது. இன்னும் ஒன்று! மொழியில் சொல் உருவாக்கம் ஆனது அன்றைய சமுதாய அமைப்பு முறை (சமூக கட்டுப்பாடுகள், சமூக நடைமுறைகள்...), அன்று நிலவும் சூழல், அன்றைய தேவை போன்றவற்றுடன் பிணைக்கப்படாத ஒன்றாக இருக்குமாயின் அது வழக்கில் இல்லாமல் போய்விடுகிறது; அல்லது உருவாக்கத்துக்கான தேவை இல்லாமல் போய் விடுகிறது. உதாரணமாக 'விபச்சாரி' என்ற சொல் ஒரு பெண்ணை மட்டும் குறிப்பதைப் பார்க்கிறோம். 'கற்பு' என்பது பெண்களுக்கு மட்டுமே உரித்தானது என்ற ஒருதலைப்பட்சமான குடும்ப அமைப்பு முறை உருவாக்கப்பட்டு சமூக நடைமுறையாக பேணப்பட்டது / படுகிறது. 'விபச்சாரி' என்பதற்கான ஆண்பால் சொல் (விபச்சாரன்*) தமிழில் உருவாக்கப்பட்டிருந்தும் கூட அது தமிழ் அகராதியினுள் உறங்கிக்கொண்டிருப்பதைப் பார்க்கிறோம். எனவே இதை மொழியின் இருட்டடிப்பாகக் கொள்ள முடியாது; சமுதாயத்தின் இருட்டடிப்பே அது!.

* (பி.கு. விபச்சாரன் இது ஒத்த இன்னொரு சொல் ஸ்திரீலோலன்)

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆம், அது சமுதாய அமைப்பு முறையின் புரையோடிப் போயிருக்கும் புண்களின் பிரதிபலிப்புத்தான்!

அடுத்து -

மொழி என்பது வெறும் சொற்கோவைகள் அல்ல. பேசப்படும் சூழல், பேசப்படும் விடயம், பேசப்படும் சந்தர்ப்பம், பேசுபவனுக்கும் கேட்பவனுக்கும் இடையிலுள்ள உறவு, கேட்பவன் அல்லது பேசுபவனிடமுள்ள மனோநிலை போன்றவற்றைப் பொறுத்தும் சொற்கள் அர்த்தம் கொள்ளப்பட்டு மொழிவடிவமாகிறது. கட்டுரையாளர் "ஜூலிஸ்" என்பவரின் உதாரணத்தை காட்டுகிறார்.

"Old woman ஐப் பார்த்து old man என்று சொன்னால் அது தவறாக அடையாளம் கண்டுகொண்டதாக அர்த்தப்படும்" என்றும், "Old man ஐப் பார்த்து old woman என சொன்னால், அது அவனை அவமானப்படுத்த சொன்னதாக அர்த்தப்படும்" என்றும் கூறுகிறார்.

இவ் உதாரணத்தில் வெறும் சொற்களை (ஆண்பால் சொல், பெண்பால் சொல் என) மட்டும் வைத்து அர்த்தத்தைத் தேடிய குறைபாடு காணப்படுகிறது.

பார்ப்போம்.

உதாரணத்துக்கு "பேசப்படும் சந்தர்ப்பம்" ஒன்றை எடுப்போம். தூரத்தே நிற்கின்ற ஒரு ஆளை கூர்ந்து பார்க்கும்போதோ, அல்லது கண்பார்வை குறைந்த ஒருவரின் கண்ப்பிட்டாலோ, அல்லது வேறுபடுத்த முடியாத தோற்றத்தாலோ (உடை, மயிர்...) அல்லது மங்கலான ஒளியிலோ (அல்லது இதுபோன்ற வேறு சந்தர்ப்பங்களிலோ) -

(old) man ஐப் பார்த்து (old) woman என்பது அல்லது

www.tamilarangam.net



(old) woman ஐப் பார்த்து (old) man என்பது ஆளை தவறாக அடையாளம் கண்டதாகவே இருக்கிறது. இதைப்போன்றே இருவருக்குமுள்ள உறவு, மனோநிலை, சூழல்.. (மேலே கூறப் பட்டவை) என்பவற்றில் வைத்தும் இது அர்த்தம் கொள் ளப்படும்.

வேண்டுமென்றே ஒரு ஆணை பெண் என்றோ அல்லது ஒரு பெண்ணை ஆண் என்றோ சொல்லும்போது இது எதிர் மறை அர்த்தத்தைக் கொண்டுவிடுகிறது. ஒரு ஆணைப் பார்த்து பெண் என்று கூறுவது அவனை இழிவுபடுத்தத் தான் என்பதை தெளிவுபடுத்தும் கட்டுரையாளர் பெண் ணைப் பார்த்து ஆண் என்று கூறுவது இழிவுபடுத்த அல்ல என்று பார்ப்பது முழுமையற்றதாகும் - அதாவது பகுதியளவே உண்மையாகும். இது மேற்குலக நாட்டுப் பெண்களுக்கு பொருந்தலாம். ஆனால் எமது சமூகத்தில் பொதுவாக பெண்களுக்கான 'குணாம்சங்களை' (அச்சம் மடம், நாணம், பயிர்ப்பு) மீறி ஒரு பெண் நடந்து கொள்ளும்போது (உ+ம் . திடுதிடுமென நடக்கும்போது, நெஞ்சு நிமிர்த்தி நடக்கும்போது ... அல்லது பெண்கள்மீதான சமுதாய கட்டுப்பாடுகளை மீறி -'அடக்கமின்றி'- நடக்கும்போது) « அவள் ஒரு ஆம்பிளை » என்பதுகூட சமூகத்தின் கண் களில் அவளை இழிவுபடுத்துவதாகவே அர்த்தப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் மட்டுமே கட்டுரையாளர் குறிப்பிடு- வது போன்று ஆண்களுக்குரிய 'வீரம்' 'துணிவு' என அர்த்தப்படுகிறது. இதைபோல் ஆணாதிக்க தெறிப்புள்ள ஒருவன் ஒரு பெண்ணைப் பார்த்து "அவள் ஒரு ஆம்பி- ளைதான்" என்று சொல்லும்போது இழிவுபடுத்தும் அர்த்

www.tamilarangam.net



த்தை கொள்வதில்லை; மாறாக அவள் போற்றப்படுகிறாள். (இங்கு ஆணாதிக்க எதிர்ப்பாளன் எப்படி இவ் வார்த்தைப் பிரயோகத்தை பயன்படுத்தலாம் என்றொரு விவாதம் எழுந்திடும். அது இக் கட்டுரைக்கு அப்பாற்பட்டது. இங்கு அவன் 'ஆம்பிளை மாதிரி' என்பதை ஒரு குறியீடாக பயன்படுத்துகிறான் என கொள்ளப்பட்டுள்ளது)

இதை தொகுத்துப் பார்க்கும்போது தெரிவது - ஆணாதிக்கம் தகர்க்கப்படும்போது பெண்களின் சமூக அந்தஸ்து உயர்த்தப்படுகிறது; பெண் தொடர்பான சொற்கள் அதன் அர்த்தத்தை உயர்த்திக்கொள்கிறது என்பதே! மாறாக இது மொழியின் குறைபாடாக கருதுவது ஏற்கக் கூடியதல்ல.

அடுத்து - « பெண்பாற் சொற்களின் கருத்திழிவு » என்ற பகுதியில் இவர் காட்டும் உதாரணங்கள் அப்படியே பிரதிபண்ணியவையாகவே தெரிகிறது. இவர் சொல்வதுபோல் Madam என்பது விபச்சார விடுதியின் தலைவியைத்தான் என்றோ, Mistress என்பது வைப்பாட்டி என்றோ அர்த்தப்படுத்துவதை நன்றாக தெரிந்துகொண்டு எழுதியதாக தெரியவில்லை. சமூக அமைப்பு முறை, நிர்வாக அமைப்பு முறை மாற்றங்களுக்கு ஏற்ப Master (எசமான்), Sir (உயர்ந்த அந்தஸ்தை விளிக்கும் சொல்) போன்ற ஆண்பால் சொற்களும் சாதாரண வழக்கில் உள்ள சொற்களாகவே தம்மை படிப்படியாக அர்த்தப்படுத்திக் கொண்டுவிடுகிறது. Sir, Madam என்பது நிர்வாக அமைப்பின் சிறு அந்தஸ்தை விளிக்கும் சொல்லாக அர்த்தப் படுத்தும் அதேவேளை இந்தியாவில் Sir (சார்) என்ற சொல்

www.tamilarangam.net


'பிளாட்பாரம்' (platform) இதும் உலாவுகிறது. Master என்பதும் அப்படியே. King, Queen என்ற சொற்கள் -ஒருசில நாடுகளைத் தவிர - இன்றைய சமுதாய அமைவினுள் தேவைப்படாமல் விடுபட்ட நிலையில் உள்ளது. வரலாறு தவிர, இன்றைய வழக்கில் ஒரு உருவகத்துக்கு மட்டுமே இவை பாவிக்கப்படுகிறது. Queen என்ற சொல் (King என்ற சொல்லைவிட) எந்தவகையில் கருத்திழிவாக பாவிக் கப்படுகிறது என்பதை கட்டுரையாளர் தெளிவித்திருக்க லாமே! 'மாமா' என்ற ஆண்பால் சொல் (கூட்டிவிடுபவர் என்ற அர்த்தத்தில்) கருத்திழிவாக பாவிக்கப்படவில்லையா?

இங்கே (சிந்தனைக்காக) தர்க்கவியல் ரீதியில் ஒரு கேள்வியை தருகிறேன். இன்று முதலாளித்துவ நாடுக ளில் கம்யூனிசம், சோசலிசம், புரட்சி போன்ற வார்த்தை களில் ஏற்பட்டுள்ள கருத்திழிவுக்கு மொழியில் போய்க் காரணத்தை தேடினால் எப்படி இருக்கும்!

சரி, விடயத்துக்கு வருவோம். "ஆண்பால் சொற்கள் (உ+ம் Sir, Master, King, Lord) நமது கருத்தை அப்படியே கொண்டிருக்க, பெண்பால் சொற்கள் (Madam, Mistress, Queen, Lady) நமது கருத்தில் இழிந்து (கருத்திழிவு) போய்விடுகின்றன" என்ற ஆசிரியரின் கண்ணோட்டத்தில் மங்கலாக "ஆண் எதிர்ப்பு" தெரிவதை பார்க்க முடிகிற தில்லையா.

தொகுப்பில் - கருத்திழிவு ஆனது மொழியின் குறைபாடு என்பதற்கு மாறாக சமூக நிகழ்வின் குறை பாடுகளை பிரதிபலிக்கிறது என்பதே சரியானதாகும். எனவே பெண்களுக்கான சமூக அந்தஸ்து உயர்த்தப்

www.tamilarangam.net



படும்போது - அதாவது ஆணாதிக்கம் அழிந்து நொறுக்கப்படும் போது - பெண்கள் தொடர்பான சொற்களில் ஏற்பட்டுள்ள கருத்திழிவு நீக்கப்பட முடியும். இங்கு பெண் விடுதலைப் போராட்டங்களுக்கான தேவை முன்நிபந்தனை ஆகிறது.

மேலும் கட்டுரையாளர் Mr, Mrs, Miss (திரு, திருமதி, செல்வி) சம்பந்தப்பட்ட பிரச்சினையையும் தெளிவாக சுட்டிக் காட்டியுள்ளார்.

1. ஆண்களின் பெயரை வைத்தே (தகப்பன்/கணவன்) பெண்ணை அடையாளம் காட்டுவதை (Miss....., Mrs....) சொல்கிறார்.
2. திருமணமாகாத / திருமணமாகிய ஆணை குறிக்க Mr (திரு) என்ற பதம் பாவிக்கப்படும்போது, பெண்களுக்கு மட்டும் இதை அடையாளம் காட்டும் விதத்தில் Miss (செல்வி), Mrs (திருமதி) பதங்கள் உருவாக்கப்பட்டிருக்கும் ஓரவஞ்சனையையும் சுட்டிக்காட்டுகிறார்.

இப் பிரச்சினைகள் பலரால் வேண்டுமென்கிற கவனத்தில் எடுத்துக் கொள்ளப்படாமல் இருக்கும் அதே சமயம், இதற்கான புதிய உருவாக்கங்களை உருவாக்குவதில் சட்டமும் தடையாக உள்ளது. அதாவது சட்டபூர்வ, நிர்வாக முறைகளில் மேற்கூறியவையே பயன்பாட்டிலுமுள்ளது. எனவே சட்டத்தை மாற்றியமைக்கவும் போராடவேண்டும்.

இதற்கு ஒரு மாற்றீடாக Ms.... என்ற பதத்தை சில பெண் நிலைவாதிகள் பயன்படுத்தினாலும், இது உச்சரிப்பில் Miss என்ற சொல்லை அண்ணளவாக ஒத்திருப்பதால் சிறு குழப்பம் எழலாம்.

கட்டுரை முன்நிறுத்தியுள்ள இவ் வகை பிரச்சினைகளை மொழியியலாளர்கள் முகம்கொடுக்க முன்வரட்டும்!

பி.கு ► Ms என்பது திருமணமாகாத/ஆகிய பெண்ணை குறிக்கும் பொது பதம் (Mr என்பதுபோல). இது ஆங்கில அகராதியில் உள்ளடங்கிக்கொண்டிருக்கிறது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# மேற்கோள் குறிபற்றி ஓர் விளக்கம்

• சி. சிவசேகரம்

சஞ்சிகைகள் பலவற்றிலும் மேற்கோள்களுக்கும், எதிர்மறைக் கருத்துக்களையும் குறிக்க பயன்படும் குறிகளான "...", '...' போன்றவை சரியான முறையில் பாவிக்கப்படுகின்றதா அல்லது மனம்போனபோக்கில் பாவிக்கப்படுகிறதா என்று **எமது** சந்தேகத்தை சிவசேகரத்திடம் கேட்டபோது அவர் அளித்த விளக்கங்களை பலருக்கும் பயன்படும் என்ற நோக்கில் கீழே தருகின்றோம்.

"...." மேற்கோளுக்குரியது. சில வேளை மேற்கோளுக்குள் வரும் மேற்கோளை குறிக்க '....' இக்குறி பயன்படுத்தப்படும். '....' என்ற குறி எதிர்மறைக்கருத்தையோ கிண்டலையோ மட்டும் குறிப்பதல்ல. வசனத்தில் வரும் முறையில் உள்ளபடி அப்படியே அர்த்தங் கொள்ள வேண்டாம் என வாசகரை எச்சரிக்கும் ஒரு கருவியாகவே அது பயன்படுகிறது. உ+ம்: 'மனிதம்' எதற்கும் அஞ்சவேண்டியதில்லை; மனிதம் எதற்கும் அஞ்ச வேண்டியதில்லை. (முன்னையது பத்திரிகையைக் குறிக்கிறது); யூ.என்.பி அரசின் 'மனிதாபிமானம்' நம்மை அயரவைக்கிறது. (இங்கு '....' அவசியமில்லை ஆயினும் கிண்டலுக்கும் சற்று அழுத்தம் தருகின்றது); ஒரு சொற்பிரயோகம் நிலைபெற்றபின் '....' குறியானது அவசியமில்லாதுபோய் விடுகிறது. வழமையிலும் வித்தியாசமான ஐயத்திற்குரிய சொற்பிரயோகங்களைச் காட்டவும் '.....' பயன்படலாம். இது ஆங்கிலத்தில் சிலசமயம் தவிர்க்கப்பட்டு சொல்லை, அல்லது சொற்றொடரை யடுத்து (SIC) என அடைப்புக்குறிக்குள் தரப்படுகிறது. 'மூலத்தில் உள்ளபடி' என்று விளங்கிக் கொள்ளுமாறு இது செய்யப்படுகிறது ('மூலத்தில் உள்ளபடி' என்று குறிப்பிடப்படுவது அச்சொற்றொடரைத் தன்மைப் படுத்தி அடையாளங் காட்டும் நோக்கிலேயே,

(59ம் பக்கம் பார்க்க)

www.tamilarangam.net

*Nur Für Freundkreis*

**சந்தா விபரம்**

தனிப்பிரதி - 3 SFr

சுவிஸ் உட்பட ஐரோப்பிய நாடுகளுக்கு

ஒரு வருடம் : 20 SFr

ஆறு மாதம் : 10 SFr

(தபால் செலவு உட்பட)

வாசகர்களே!
விமர்சனங்களையும்
ஆக்கங்களையும்
வரவேற்கிறோம்!
• ஆ-ர் குழு •

## முக்கிய அறிவித்தல்

சந்தா முடிவடைந்தவர்கள், உங்கள் சந்தாக்களைப் புதுப்பித்துக் கொள்ளுங்கள்.

வங்கிக் கணக்கு இல:
SPAR KONTO : 0094- 157146- 60- 1

வங்கி முகவரி : "BÜCHER VERKAUF"
SCHWIZERISCHE KREDITANSTALT

SWITZERLAND

-58ம் பக்கத் தொடர்ச்சி.

இங்கு '----' தெளிவு படுத்தும் நோக்கிற் பயன்படுகிறது).

சுருங்கச் சொன்னால் '----' ஒரு சொல்லையோ தொடரொன்றையோ பற்றிய விசேட கவனத்தை ஈர்க்கும் ஒரு கருவி எனலாம். "---" இக்குறி மேற்கோளுக்கு உரியது. இது ஆங்கில மொழி நடைமுறை தமிழுக்கும் பொருந்தும். இவற்றுக்கு வேறும் பல முறைகள் உள்ளன: (?), (!) என்றும் வாசகர்கள் இவற்றை இவை வரும் நிலைகளை வைத்து விளங்கிக் கொள்வார்கள். நல்லதோர் பொது விதி: வசனத்தைத் தெளிவாக விளங்க உதவக்கூடிய வகையில் மிகச் சிக்கனமான மாத்திரைக் குறிகளது உபயோகம் சிறந்தது.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# கோபியுங்கள்!

என்மேல் கோபம் எனக்கு.
எம் மக்கள் இழிநிலைக்கு
என்ன காரணம் என
எண்ண முடியவில்லை
அதனால்
என்மேல் கோபம் எனக்கு

சீரழிவுச் சாக்கடையில்
சிதைபடும் காலந்தனை
எம் மக்கள் நிலைபற்றி
சிந்திக்கா திருப்பதனால்
என்மேல் கோபம் எனக்கு

தங்கத்தை மேலடுக்கி
தரமுயர்த்திக் காட்டுகிறேன்
மங்கிப் போகும் மக்கள் வாழ்வை
மனமுணர்ந்து கொள்ளாததால்
என்மேல் கோபம் எனக்கு

தன்மேல் கோபிக்க
தகுதி உண்டு எல்லோர்க்கும்
கோபிக்க வேண்டுமென
கோரிக்கை விடுக்கின்றேன்
கொஞ்சமாவது கோபியுங்கள்!

• யதார்த்தினி •